Lem 17, 8,9

12 feb 1935

JL
802211,N02GS
N35 · 17·8,9.
2104TX

ஓம்

ஞானசாகரம்

(அறிவுக்கடல்)

JNANASAGARAM

இது
முப்பத்து மூன்று ஆண்டுகளாக நடைபெறுந்
தனிச் செந்தமிழ் வெளியீடு

A BI-MONTHLY

SEP 1935

திருவள்ளுவர் ஆண்டு ௧௯௬௬, கார்த்திகை, மார்கழி
திங்கள், ௬ள.] [தொகு, அ, ௯.

பொருளடக்கம்

இளைஞர்க்கான இன்றமிழ் (தொடர்ச்சி)
(Pure Tamil Reader for the Young. second book).
தொலைவிலுணர்தல் (Telepathy), முற்றுப்பெற்றது.

ஆசிரியர்:
மறைமலையடிகள் என்னும்
ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்,
SWAMI VEDACHALAM.
பொதுநிலைக்கழக குரு,
பல்லாவரம்
PALLAVARAM

பொதுநிலைக்கழக நிலையத்தின்கண் உள்ள
திருமுருகன் அச்சுக்கூடத்தில்
T. M. PRESS
பதிப்பிக்கப்பட்டது.

12th September., 1935

ஒரு திருமலர்க் கையொப்பம்] [நான்கு ருபா

All Rights Reserved.

ஞானசாகரக் கையொப்ப நேயர்க்கு

இற்றைக்கு 24-ஆண்டுகட்குமுன் யாம் எழுதத்துவங்கிய தொலைவிலுணர்தல் என்னும் அரியநூல், நமது ஞானசாகரப் பதினேழாந் திருமலரின் 8, 9-ஆம் இதழ்களாகிய இவற்றின்கண் இறைவன் திருவருளால் இனிது முடிவு பெறலாயிற்று. நீங்கள் இதன் பக்கங்களைப் பிரித்தெடுத்துத் தொடர்பாகவைத்து உடனே கட்டிடஞ்செய்துகொள்ளல் நன்று. தொடர்பாக நம் ஞானசாகரத் திருமலர்களைப்பெறாமல் இடையே வந்தவைகளைப் பெற்ற நேயர்கள், இந்நூலின் முந்தினபக்கங்களைப் பெறவிரும்புவராயின் நூறுபக்கங்கள் வரையில் ஒன்றரை ரூபாயாக விலைகுறித்து, வேண்டும் பக்கங்களுக்குரிய விலையைத் தபாற்கூலி 50-பக்கங்களுக்கு 2 அணா விழுக்காடு கூட்டி உடனே எமக்கு அனுப்பிவைத்தால், வேண்டும் பக்கங்களை அனுப்பிவைப்பேம்.

ஞானசாகர ஆசிரியர்.

தமிழகம்

இச்சிறந்த தமிழ்நூல் யாழ்ப்பாணத்து நவாலியூர், திருவாளர் க. சி. கந்தையா பிள்ளையவர்களால் தொகுக்கப்பட்டுச், சென்னைக்கு அருகிலுள்ள சைதாப்பேட்டை "ஒற்றுமை" நிலையத்தில் வெளியிடப்பட்டதாகும். பண்டைத்தமிழரின் மொழி, மதம், நாகரிகம் முதலியவைகளின் வரலாறுகளை ஆராய்ந்து தமிழறிஞர் பலர் அவ்வப்போது எழுதி வெளியிட்ட கட்டுரைகளிற் சிறந்த பகுதிகளை யெடுத்துத் தொகுத்துக்காட்டுவது இந்நூல். இந்நூன் முகவுரையில் "தமிழகம் தொன்மைமிக்கநாடு. இதன்வரலாற்றினைத் தொடர்புறக் கூறும் நூல்கள் மிகச்சில. சிறியவும் பெரியவுமாகிய புத்தகங்களிலும், பத்திரிகைகளிலும் ஆராய்ச்சி அறிஞர் தமிழகத்தைப்பற்றிய பொருளுரைகளைக் காலந்தோறும் வெளியிட்டுள்ளார்கள். அன்னோர் முடிபுகளை இயன்றவரையிற் றெருகுத்துக் கோவைப்படுத்தியதே எமது உழைப்பாகும்" என்று இதனைத் தொகை செய்த பிள்ளையவர்கள் கூறுதலால் இஃது ஒரு தொகைநூலாதல் அறியப்படும். அறிஞர்பலர் பலகாலங்களில் எழுதிய தமிழகவரலாறுகளை யெல்லாம் ஒருவர் தேடிப்பயிலுதல் பெரிதும் வருத்தமான முயற்சியாகும். அம்முயற்சியைத் தாம் ஒருவரே எடுத்துக்கொண்டு பிள்ளையவர்கள் அவ்வரியகட்டுரைகளை இதன்கட் டொகுத்திருத்தலால், இதனைப்பயில்வார் தமிழகவரலாற்றைப்பற்றி அறிஞர் பலர் எழுதிய உரைகளையும் எளிதிலேயுணர்ந்து உண்மைதெளிகுவர். இதனைத் தமிழ்மக்களனைவரும் வாங்கிப்பயில்வாராக. இதன்விலை இரண்டே கால் ரூபா.

இந்திய பத்திரிகைத் தொழிலியல்

இந்நூல், கோயமுத்தூர், விளாங்குறிச்சி, திருவாளர் வி. நா. மருதாசலக் கவுண்டரவர்களால் இயற்றப்பட்ட உரைநடை நூல். இது, நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு முதற்பகுதியிற் "பத்திரிகை வரலாறும்," இரண்டாம் பகுதியிற் "பத்திரிகைத் தொழிலும்," மூன்றாம் பகுதியில் "பத்திரிகைத் தொழின் முறையும்," நான்காம் பகுதியாகிய முடிப்புரையில் "பத்திரிகை மூப்பாளர், இந்திய சகோதரருக்கு வேண்டுகோள், பத்திரிகைத் தொகை வகை கடமைகள்" என்பனவும் நன்கெடுத்து விளக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலின் ஊடே ஊடே விரவிக்காணப்படும் ஆங்கிலச்சொற்கள் சொற்றொடர்களை அடிக்குறிப்புகளாகச் சேர்த்திருந்தால் அஃது அழகிதாயிருக்கும். இதன் தமிழ்நடை அரைவாசிக்குமேல் நன்கமைந்துளது. இஞ்ஞான்றை நாகரிக அறிவுவாழ்க்கைக்கு இன்றியமையாத புதினத்தாள்களைப் பற்றியனவெல்லாம் எல்லாருந் தெரிந்துகொள்ளுதல் நன்றாகலின், தமிழ்மக்களனைவரும் இதனைப் பெற்றுப் பயில்வாராக! இதன் விலை ஒன்றரை ரூபா. இது கிடைக்கும் இடம்: கோவைத் தமிழ்ச்சங்கம், வைசியாள் வீதி, கோயமுத்தூர்.

ஓம்

தொலைவிலுணர்தல்

TELEPATHY: THOUGHT-TRANSFERENCE)

By

இது

பல்லாவரம்

பொதுநிலைக் கழக ஆசிரியர்

மறைத்திருவாளர் சுவாமி வேதாசலம்

SWAMI VEDACHALAM

என்னும்

மறைமலையடிகளால்

இயற்றப்பட்டுப்,

பல்லாவரம்

Pallavaram

பொதுநிலைக்கழக நிலையத்திலுள்ள

திருமுருகன் அச்சுக்கூடத்தில்

T. M. Press,

பதிப்பிக்கப்பட்டது

September, 1935

All Rights Reserved [விலை ரூபா 3-0-0

முகவுரை

இற்றைக்கு இருபத்துநான்கு ஆண்டுகளுக்குமுன், அதாவது விரோதி கிருது ஆண்டு (1911) சித்திரைத் திங்களில் யாம் எழுதத் துவங்கிய **தொலைவிலுணர்தல்** என்னும் இவ்வுரைநூல், எமது 'ஞானசாகரம்' என்னும் **அறிவுக்கடலின்** ஆறுந்திரு மலரிலும் எட்டாந் திருமலரிலும் ஒன்பதாந் திருமலரிலும் ௯௨ பக்கங்கள் வரையில் வெளிவந்து, பத்து, பதினொன்று, பன்னிரண்டு, பதின்மூன்று, பதினான்கு, பதினைந்தாந் திருமலர்களில் தொடர்ந் தெழுதப்படாமல் நின்றுபோய், மீண்டும் ௧௬-ஆந் திருமலரில் ஆங்கிரச ஆவணி புரட்டாசிக்குரிய ஏழு எட்டு இதழ்களில் தொடர்புகொண்டு வெளிவரத்துவங்கி, இப்போது அதன் பதினேழாந் திருமலரின் எட்டு ஒன்பதாம் இதழ்களில் எல்லாம் வல்ல இறைவன் றிருவருளால் இனிது முடிவு பெறலாயிற்று.

இங்ஙனம் இந்நூல் இடையிடையே எழுதப்படாமல் நின்று போயது ஏனெனின்; **யோகநித்திரை, மனிதவசியம், மக்கள் நூறாண்டு உயிர்வாழ்தல் எப்படி?, மாணிக்க வாசகர் வரலாறுங் காலமும்** என்னும் பேராராய்ச்சிப் பெரும்பயன்நூல்களும் வேறுசில சிறுநூல்களும் இடையிடையே எழுதி வெளியிடவேண்டுவது இன்றியமையாததாக நேர்ந்தமையானும், அந்நூற்பொருள்களின் உண்மைகளை உள்ளவாறு ஆராய்ந்து எழுதுதற்குத் தமிழ் ஆங்கிலம் வடமொழி என்னும் மும்மொழிகளிலும் உள்ள உயர்ந்த பல நூல்களை ஓவாது பயிலநேர்ந்தமையானுந், **தொலைவிலுணர்தல்** என்னும் இந்நூற்பொருளின் உண்மைகளையும் உண்மை நிகழ்ச்சிகளால் விளக்குதற்கு இன்னும் பலநூல்களைப் பயிலவேண்டுவது முதன்மையா யிருந்தமையானும் மேற்கிளந்த நூல்கள் முடியுந்தனையும் இந்நூலை இடையே பல ஆண்டுகள் நிறுத்திவைக்க வேண்டுவதாயிற்று. என்றாலுந், துவக்கஞ் செய்யப்பட்டு இருபத்துநான்கு ஆண்டுகளுக்குப் பிறகாவது இது முற்றுப் பெறும்படி அருள்புரிந்த எம்பிரான் றிருவடிகளுக்கு அடியேங்களின் புல்லிய வணக்கங்கள் உரியவாகுக!

210478

‘தொலைவிலுணர்தல்’ என்பது ஐம்புலன்களுக்கும் எட்டாத் தொலைவிலுள்ள பொருள்கள் உயிர்கள் பொருணிகழ்ச்சிகள் உயிர் நிகழ்ச்சிகளை மக்களாகிய நாம் நமதுள்ளத்தால் உணரப்பெறுதலே யாகும். ஐம்புலன்களின் வாயிலாகவன்றி எதனையும் உணரமாட்டாத எளிய நிலையில் நிற்கும் நாம், அவ்வைம்புலன்களுக்கும் எட்டாத இடத்திலுங் காலத்திலும் உள்ள பொருள்களையும் உயிர்களையும் அவற்றின்நிகழ்ச்சிகளையும் ஒரோவொருகாற் கனவிலும் நனவிலும் நம் அகக்கண்ணெதிரே சடுதியிற்கண்டு, அங்ஙனங் கண்டபடியே பின்னர்ப் புறக்கண்ணெதிரேயும் அவை தோன்றக்கண்டால் அப்போது நாம் எவ்வளவு இறும்பூதெய்துகின்றோம்! கனவிலோ நனவிலோ நாம் நம் அகக்கண்ணாற்கண்டு நினைவுற்ற ஓரிடத்தை அங்ஙனங் கண்டபடியே சிறிதும் பிசகாது நமது புறக்கண்ணெதிரேயும் காணநேருங்கால் அப்போது நாம் எவ்வளவு வியப்புறுகின்றோம்! இன்னும் நமக்கு இனியராயினார் ஒருவரைப்பற்றி நாம் ஆழ்ந்து நினைந்துகொண்டிருக்கையில், அவர் நமக்கெதிரே வந்தாலும், அல்லதவரிடமிருந்து எதிர் பாராமலே ஒருகடிதம் வந்தாலும் அப்போதும் நாம் எவ்வளவு வியப்பினை அடைகின்றோம்! இவ்வாறு ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்ட நிகழ்ச்சிகள் ஒருகாலன்றிப் பலகாலும் ஆங்காங்கு நிகழ்தலை நம்மனோர் தம்மாட்டும் பிறர்மாட்டும் அடுத்தடுத்து அறிந்துவைத்தும், அவற்றைப்பற்றி ஆராயாதும், அவ்வாராய்ச்சியாற் பெறும் பெரும்பயனைப் பெறாதும் வாளா நாட்கழித்து மாய்ந்துபோதல் எத்துணை இரங்கத்தக்கதொன்றாய் இருக்கின்றது!

இவ்வுடம்பும் இவ்வுடம்பிலமைந்த ஐம்புலங்களும் நமக்கு அறிவை வளர்த்தற்கும் இன்பத்தைப் பெருக்குதற்கும் இன்றியமையாதவைகளாய் இருந்தாலும், இவையிற்றின் உதவியில்லாமலே நாம் பொருள்களையும் உயிர்களையும் அவற்றின் நிகழ்ச்சிகளையும் நேரேயறிந்துகொள்ளுதற்குரிய அறிவும் ஆற்றலும் உடையவர்களாய் இருக்கின்றோம் என்பது மேல் நிகழ்ச்சிகளால் விளங்கவில்லையா? இத்துணைச்சிறந்த அறிவாற்றல் நமக்கு இயற்கையாகவேயிருந்தும், ஏதோ ஓர் இருள் நம்மறிவைக் கவிந்துகொண்டிருத்தலினாலன்றோ, இவ்வுடம்பும் இதிலமைந்த ஐம்புலங்களும்

அவ்விருளைப் போக்கி நமதறிவை விளங்கச்செய்தற்கு இன்றியமையாக் கருவிகளாக இறைவனால் நமக்கு வகுத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன? கட்பார்வை மங்கிய கண் கண்ணாடியின் உதவியால் தனது பார்வை விளங்கப் பெறுதல் போலவும், புகையிற்பொதிந்த நெருப்புக் காற்றினுதவியால் அப்புகை நீங்கிச் சுடர்ந்தெரிதல் போலவும், பாசிமூடிய நீர் செம்படவர்வலையால் அரிப்புண்டபின் தெளிந்துவிளங்குதல் போலவும், மழைமுகிலால் மறைவுண்ட மதியம் மழை பொழிந்தபின் நீலவானில் நிலவொளி விரித்துச் சாலத்துலங்குந் தன்மைபோலவும், நமதறிவை மறைத்த இருளும் விலக விலக அவ்வறிவுஞ் சொலற்கருந் துலக்கமுடையதாகி, ஐம்புலஉதவி வேண்டாமலே அண்மையிலுஞ் சேய்மையிலும் முற்கால இக்கால பிற்காலங்களிலும் எவற்றையும் எவற்றின் நிகழ்ச்சிகளையும் நேரே காணவல்லதாயிருக்கின்றது. அங்ஙனம் நேரே காணவல்லதாகிய அறிவுக்காட்சியை நாம் பெறுங்கால், அதற்கு முன் நாம் அறியாமையால் அடைந்த நோயுங் கவலையும் வறுமையும் அவற்றால் வரும் அளவிலாத் துன்பங்களும் நம்மைவிட் டொருங்கே நீங்கிப்போக, நாம் எல்லையற்ற அறிவும் இன்பமும் நிரம்பப்பெற்று, எல்லாம் வல்ல ஆண்டவனது அருட் பேரொளியில் அழிவின்றி நிலையுதலுறுவோம்.

ஆகவே, அத்துணைச் சிறந்த அறிவுக் காட்சி நமக்கு இயற்கையே உண்டென்பதனையும், அவ்வறிவுக் காட்சியால் நம் மக்களிற் சிலர் பலர் ஐம்புலங்களுக்கும் எட்டாத அரியபல நிகழ்ச்சிகளை நேரேகாண்டலையும், உண்மையாக நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கொண்டு நன்குவிளக்கி, அவ்வாற்றால் மக்கட்பிறவியினை அரிதிற் பெற்றாரெல்லாரும் ஓவாத தமது தவமுயற்சியால், அவ்வறிவுக் காட்சியினை இன்னும் வரம்பின்றிப்பெருகச்செய்து, அதனால் அறியாமையும் அறியாமையினை அடிப்படையாகக் கொண்டு வரும் அல்லல்களும் ஒழிந்து, இம்மை மறுமைக்குரிய எல்லா நலங்களையும் எய்தல் வேண்டும் என்னும் நோக்கப்பற்றியே **தொலைவிலுணர்தல்** என்னும் இந்நூலை இயற்றலாயினேம்.

இந்நூலின்கண் எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் மெய்ந்நிகழ்ச்சிகளிற் பெரும்பாலன மேனாட்டாசிரியர் ஆராய்ந்து உண்மையென உறுதி செய்தவைகளாகும். இத்தமிழ்நாட்டிலும் ஆங்

காங்குத் தொலைவிலுணர்தலாகிய நிகழ்ச்சிகள் நாடோறும் நிகழ்கின்றனவாயினும், அவைதம்மை நடுநின்று ஆராய்ந்து பல மெய்ச்சான்றுகளால் உறுதிப்படுத்துவாரும், உறுதிப்படுத்தி நூல் எழுதுவாரும், யாமறிந்தவரையில், எவருமில்லை. அதனால், இத் தமிழ்நாட்டில் நிகழுந் தொலைவிலுணர் நிகழ்ச்சிகளை மிகுதியாய் எடுத்துக்காட்டுதல் எம்மால் இயலாதாயிற்று. எங்காட்டிலிருப்பினும், எம்மக்கள் குழுவைச் சேர்ந்தவராயினும், உண்மை காணும் வேட்கையும் முயற்சியும் உடையசான்றோர் ஆராய்ந்து கண்ட மெய்ம்மைகளை எடுத்துக்காட்டுதலே மக்களுக்கு மெய்யறிவைத் தருமாகலின், யாம் எடுத்துக்காட்டிய மேனாட்டாசிரியர்தம் மெய்யுரைகள் நந் தமிழ்நாட்டவர்க்கு மெய்யறிவைப் பயந்து அவர்க்குப் பெருநலன்களை விளைக்குமென்னும் நம்பிக்கை யுடையேம்.

இருபத்துநான்கு ஆண்டுகளுக்குமுன் யாம் இந்நூலை எழுதத் துவங்கிய காலத்தில், வடசொற் கலப்பால் நம் செந்தமிழ் மொழிக்குண்டாந் தீதினை உன்னியாதிருந்தேம். அதனால், இந் நூற்படிகள் சிலவற்றில் முதல் ஐம்பத்தொரு பக்கங்கள்வரையிற் சிற்சில வடசொற்கள் கலந்துவிட்டன. இந்நூலின் இரண்டாம் பதிப்பில் அவ்வடசொற்கள் களைந்தொழிக்கப்படும். இதுகாறும் எமது நூற்றொண்டுக்குத் துணைபுரிந்துவரும் இறைவன் திருவருள் மேலும் அதற்குத் துணைபுரிவதாக!

பல்லாவரம்
பொதுநிலைக்கழக நிலையம்,
திருவள்ளுவர் ஆண்டு, ௧௯௬௬.

மறைமலையடிகள்

தொலைவிலுணர்தல்

பொருளடக்கம்

	பக்கம்
தொலைவிலுணர்தல்	௧
நுண்ணிய வெளிகள் (சூக்கும ஆகாசங்கள்)	௬
மனவெளி (மானத ஆகாயம்)	௧௦
மனவுணர்வை நுட்பமாக்கல்	௧௭
உணவு	௪௨
மூச்சுவிடும் முறை	௫௨
தொலைவிலுணர்வோர் உணர்த்துவோர்	௫௫
முதற்பழக்கம்	௫௮
இடம் உணர்தல்	௬௦
பொருள்களை உணர்தல்	௬௧
அறிதுயில் வருவிக்கும் முறை	௭௨
தாமேதோன்றும் உணர்ச்சிகள்	௮௩
கனவிற்றோன்றும் உணர்ச்சிகள்	௯௦
நனவிற்றோன்றும் முன்னறிவிப்புகள்	௧௩௩
பலர்க்குத்தோன்றிய நினைவுருவங்கள்	௧௬௦
தெளிவுக்காட்சி	௧௯௫

“இவ்வாண்டின் துவக்கத்திலேயே ஒருநாளிரவில் என் படுக்கையறையின் கண் ஓர் உருவம் இயங்குதலை உணர்ந்தேன். அது கூன்முதுகுடைய ஒருபெண்பாலின் உருவாய்க், கரியதொருபோர்வையினால் முடிமுதல் அடிவரையிற் போர்த்துக் கொண்டிருந்தது. அது முதுமை மிக்க ஒருபெண்பாலின் உருவமாகத்தான் இருக்கவேண்டுமென என் உளத்திற் பட்டதாயினும், அதன் முகத்தை யான் காணக்கூடவில்லை. அது மெதுவாயுங் கள்ளத்தனமாயும் என்படுக்கை யறையின் வாயில் வழியே சென்று, அவ்வறையின் அதே பக்கத்திலுள்ள ஆடை வைக்கும் அறையை அணுகக்கண்டேன். அதன்பின் அது சடுதியில் முற்றுமே மறைந்து போயிற்று. திடீரென உண்டான அதிர்ச்சியினால் யான் உரக்கக் கூவினேன். அத்தன்மையதான ஒரு தோற்றத்தை இதற்கு முன்னாயினும் பின்னாயினுங் கண்டிலேன். எனது இயற்கையும் ஆவியுருவங்களைக் காண்பதற்கு ஏற்றதன்று. அவ்வுருவமும் அது தோன்றிய நிகழ்ச்சியுங் கனவல்ல; எனக்கது மெய்ம்மையான தெளிவு நிகழ்ச்சியேயாகும். இனி, அது தூக்கத்திற்கும் விழிப்பிற்கும் இடைப்பட்டதொரு நிகழ்ச்சியும் அன்று. நான் கண்டது நனவு நிகழ்ச்சியேயெனத் தெளிவாய் உணர்ந்தேன். யான் கண்ட அவ்வுரு எவருடையதென்பதை யான் அறிந்திலேன். மூன்றாண்டுகளாக யான் இவ்வீட்டிற் குடியிருந்து வருகிறேன்; எனக்கு முன் இதிற் குடியிருந்தவர்களைப் பற்றி யான் ஏதும் அறியேன். அந்த அறையில் விளக்குக் கொண்டுபோகவும் இல்லை; வேறொரு விளக்கு அதன் கண் எரியவுமில்லை. என்றாலும், அவ்வுருவம் நன்றாகவே கட்புலனாயது; ஆடையறையும் அங்ஙனமே கட்புலனாயது; ஆனால், அது மறைந்துபோயதும் எல்லாம் இருளாகவேயிருந்தது; கதவும் பூட்டப்பட்டிருந்தது.”

மேலதனை எழுதிய துரைமகனாரைப்போலவே அவர்தம் மனைவியாருந் தாம் அவ்வுருவத்தைக் கண்டதனையுந், தம் சிறுமியுஞ் சமையற்காரனும் அதனைக் கண்டதனையும் பின் வருமாறு தெரிவித் தெழுதுகின்றார்:—

“முன்னே குறிப்பிடப்பட்ட இரவில் யான் திடுமென விழித்தெழுந்தேன்; ஏது காரணத்தாலென்பதை அறிந்திலேன்.

என் கணவனார் தமது முழங்கைமேற் சாய்ந்து கொண்டு புதியளான ஒரு கிழவியை உற்று நோக்கிக்கொண் டிருந்தனர்; அக்கிழவி ஆடையறையண்டை குனிந்து சென்றதை யானுங் கண்டேன். அதனை உண்மையான வடிவமென்றே நம்பினேன். ஆனால் அது திடீரென மறைந்து விட்டது. அப்போது என்கணவனார் தாம் கூறியபடியே ஒருபெருங் கூச்சலிட்டனர்; அதன்பின் தாங் கண்டதிதுவென எனக்குச் சொல்லினர். யான் கதவைத் திறக்க முயன்றேன்; ஆனால், அது பூட்டப்பட்டிருந்தது. என்கணவனார்க் குண்டான நினைவே எமதுள்ளத்தின் ஒற்றுமையால் எனக்கும் அங்ஙனந் தோன்றியதுபோலுமென முதலில் எண்ணினேன்; ஆனால், அவரைவிட யானே அத்தகையதொரு தோற்றத்தைக் காண்டற்கு ஏற்றவளென எண்ணினேன். அவ்வுருவத்தோற்றத்தைப்பற்றி யான் என் ஏவலாளர்க்கு உரையாதிருந்தும், மறுநாளில், மூன்றாண்டுள்ள ‘மேரியல்’ என்னுஞ்சிறுமி அன்றிரவு தன் செவிலித்தாயை யெழுப்பி, அச்சம் இல்லாமலே ‘கிளாரா, கிளாரா, அறையிலே ஒரு கிழவி வந்திருக்கிறாள்’ எனச் சொல்லியதென்று அச்செவிலித்தாயே என்னிடம் பகர்ந்தாள். எனினும், அச்செவிலித்தாய் அத்தகையதேதுங் கண்டிலள். இன்னும், என்சமையற்காரி ‘இராக்காலங்களில் நீங்கள் என் அறையில் வந்ததுண்டா?’ என என்னைப் பலகால் வினவியதுண்டு; ஆனால், யான் அங்ஙனம் அவளறையிற் சென்றதேயில்லை. இதனை யான் அவட்குச் சொல்லியபோது அவள் இறும்பூதுற்றுத் தியங்கினாள்.” என்பது.

இந் நிகழ்ச்சியிற் போந்த துரைமகனாரும் அவர்தம் மனைவியாரும் அவர்தஞ் சிறுமியுஞ் சமையற்காரியு மெல்லாங் கண்ட அக்கூனற் கிழவியின் உருவம் அதற்குமுன் அவர்களால் அறியப்படாத தொன்றாயிருத்தலால், அஃது அவ்வீட்டிலிருந்து முன்னொருகால் இறந்துபோன கூனற்கிழவியின் உருவமோ, அல்லது மறுமையுலகத்தில் ஆவியுருவில் நிற்கும் அவளது பற்றுள்ளத்தில் எழுந்த நினைவின்றோற்றமோ இன்னது தானென்று உறுதிப்படுத்தல் இயலாததா யிருக்கின்றது. அதுவேயுமன்றி, நால்வர் கண்ணுக்குத் தோன்றிய அவ்வுருவம், அந்நால்வரில் எவர்க்கு உண்மையாய்த் தோன்றியது? மற்றெவர்க்கு அவரது நினைவின்

எதிருருவாய்த் தோன்றியது? என்றாய்ந்து இதுதான் முடிவெனக் காண்டலும் இயலாததா யிருக்கின்றது. ஆனாலும், அத்துரை மகனாரின் மனைவியார் தாங்கண்ட அவ்வுருத் தங் கணவனார் நினைவின் றோற்றமா யிருக்கலாமோவென முதலில் ஐயுற்றுப், பின்னர் அத்துணை நினைவு வன்மை தமக்கன்றித் தங் கணவனார்க் கில்லாமையை யுணர்ந்து பார்த்துத், தாங் கண்ட காட்சியே உண்மையாக இருக்கவேண்டு மென்று முடிவு செய்து கொண்டதிலிருந்து, ஒருகால் அவரது கண்முற் றோன்றிய தோற்றமே உண்மைத் தோற்றமாய், ஏனை அவர்தங் கணவர் சிறுமி சமையற்காரி முதலாயினார் கண்டது அத் துரைமகளாரின் நினைவின் றோற்றமா யிருக்கலாமோ என்று கருதுதற்கும் இடம் உண்டாகின்றது. அது வல்லாமலும், அவர்தஞ் சமையற்காரி அவ்வுருவி னியக்கத்தைத் தன் அறையிற் பலகாற் கண்டு தன் தலைவியை வினவியதுபோல, அவடன் றலைவி அங்ஙனம் அதனைப் பலகாற் கண்டு பிறரிடங் கூறினாரென்பது மேற்போந்த பகுதியிற் புலனாகாமையின், அச்சமையற்காரிக்குத் தோன்றியதே உண்மையான தோற்றம், மற்றையோர் கண்டனவெல்லாம் அச்சமையற்காரிதன் நினைவின் றோற்றமா யிருக்கலாமெனக் கூறுதற்கும் இடனிருக்கின்றது. அஃதெங்ஙன மாயினும், முதலில் ஒருவர்க்குத் தோன்றிய அக்கிழவியுருவின் றோற்றம் மட்டும் உண்மையான தொன்றாகத்தான் இருக்கவேண்டுமென்பதிலோ ஐயங் கொள்ளுதற்கு இடனில்லை. என்றாலும், அக்கிழவியின் நினைவுருவோ அல்லதவளின் நுண்ணுடம் புருவோ அங்கே தோன்றியது என்பது மட்டுந் துணியப்படாததொன்றா யிருக்கின்றது. அதுகிடக்க.

தெளிவுக் காட்சி

ஒருவர் உறுத்து நினைந்தநினைவும் உறுத்துக் கண்டகாட்சியும், அண்மையிலோ சேய்மையிலோ உள்ள பிறருடைய உள்ளத்தில் விலக்கமுடியாமற் றோன்றுதலும், அல்லதவரது கட்புலனெதிரே உருவுகொண்டு தோன்றுதலுமாகிய நிகழ்ச்சிகளைப் பற்றியே இந்நூலில் இதுகாறும் நன்குவிளக்கிப் போந்தாம்.

இனி, அவ்வாறின்றி, எவரும் நினையாத நினைவுகளையுங் காணாத காட்சிகளையும், எவர்க்கும் புலனாகாதிருந்த மறை பொருள்களையும் அண்மையிலுஞ் சேய்மையிலுந் தெளிவாகக் காணுந் ‘தெளிவுக் காட்சி’ மக்களிற் சிலர்க்கு உள்ளத்தே அமைந் திருக்கின்றது என்பதனையுஞ் சிறிதுவிளக்குவாம். இதற்கு அமெரிக்கா தேயத்தில் நிகழ்ந்த உண்மை வரலாறு ஒன்றனை இங்கே மொழி பெயர்த்து வரைகுதும்:—

“சிக்காகோ நகரமென்பது இந் நிலவுலகத்துள்ள எல்லா நகரங்களைப் பார்க்கிலும் முயற்சியிற் றலைசிறந்ததொன்றென்பது எவரும் அறிந்ததேயாம். யோனாமுனிவரது சுரைக்காயைப் போல் அஃது ஓரிரவிலேயே முளைத்து விட்டதெனத் தோன்றியது. அதன் குடிமக்களதுதொகை விரைந்து பெருகியது; அதனாற், புழக்கத்திற்கும் இன்பநுகர்ச்சிக்குந் தண்ணீர் இன்றியமையாது வேண்டப்படுவதாயிற்று. நிலநூல்வல்லார் அத்தகைய நிலப் படையின்கீழ்த் தண்ணீர் இருத்தல் இயலாது என்றனர்; அதனாற் கலைநூலறிவு பிழைபட்டது. நிலத்தின்மேலுள்ள தண்ணீரையே எதிர்பார்க்க வேண்டினமையின், உடனே ஒரு கூட்டுறவுக் கழகத்தார் ஏற்பட்டு மேலுள்ள அழுக்குத் தண்ணீரையே எல்லார்க்குங் கொடுத்து வரலானார்.

“அப்போது அச்சிக்காகோ நகரத்தில் ஆபிரகாம் ஜேம்ஸ் எனப்பெயரிய ஒருவன் இருந்தனன்; அவன் கல்வியறிவில்லாத ஒருபேதை; கள்ளமில்லாத வெள்ளையுள்ளத்தினன். ஆனாலும், அவன் இயற்கையாகவே தெளிவுக் காட்சி வாய்ந்தவன், உண்மையான ஒரு குறிகாரனென்றும், அவன் வெளியுணர்வு சிறிதுமில்லா அறிதுயிலிற் செலுத்தப் பட்டபோது அந்நகரத்துக்கு அருகாமையில் உள்ள ஒரு நிலப்பகுதியின் கீழ்த் தண்ணீரும் மண்ணெண்ணெயும் ஏராளமாய்க் கிடைக்குமெனக் கூறினானென்றுங் காரலின் ஜார்டன் என்னும் அம்மையார் அறிந்து உரைத்தார். ஆனாலும், நீண்டகாலம் வரையில் அவன் கூறிய அவ்வுரைகளை எவருமே உன்னித்திலர். கடைசியாக ‘மெயின்’ என்னும் ஊரிலிருந்து சிக்காகோ நகரத்திற்கு அலுவல் மேல் வந்த ‘உவைட் ஹெட்’ ‘ஸ்காட்’ என்னும் இருவர், ஆபிரகாம்

ஜேம்ஸ் என்னும் அக்குறிகாரன் கூறிய உரைகளைக் கேள்வியுற்றுத், துளைத்துச் சென்றால் தண்ணீர் ஏராளமாய்க் கிடைக்குமென்று அவன் குறிப்பிட்டுச் சொல்லிய இடத்திற்கு அவனை அழைத்துச் சென்றனர். அவன் உடனே அறிதுயிலிற் சென்றவனாகித் தண்ணீர் கிடைக்கக் கூடிய அவ்விடத்தைச் சுட்டிக் காட்டினான். பின்னும், அவன் தான் தண்ணீர் மட்டுமேயன்றி, இரண்டாயிரமைலுக் கப்பாலுள்ள பாறை மலைகளிலிருந்து அந்நீரோட்டந் தாம் நிற்கும் அவ்விடத்திற்கு வருதலையுங் கண்டதாகப் பகர்ந்தனன்; அந்நீரோட்டம் ஊடுருவிவரும் நிலப் படைகளையும் நிலவறைகளையுங்கூடத் தான் ஒரு கிழி (map)யில் எழுதிக் காட்டுதல் கூடுமெனவும் மொழிந்தனன். உடனே அந் நிலத்தை வாங்கிக் கொள்வதற்கு உடன்படிக்கை செய்யப் பட்டது; நிலத்தைத் தோண்டும் வினையுந் துவங்கியது. இங்ஙனந் துவங்கியது 1864-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களிலாகும். அவ் வினை நாடோறும் நடைபெற்று நவம்பர்த் திங்களுக்கு வந்ததுங் கீழே 711 அடி ஆழம் அகழப்பட்டது’; அவ்வளவு ஆழந் தோண்டியதும் நீர்நிலை தட்டுப்பட, அப்பொழுதே நாளொன்றுக்கு அறுநூறாயிர நாழி தீஞ்சுவைத் தண்ணீர் மேற்பொங்கி வழிந்தோடலாயிற்று. அக்குறிகாரன் பேச்சை முதலில் நம்பாதிருந்தமக்கட்கு நம்பிக்கை வருவித்தற் பொருட்டு அவன் அகக் கண்ணாற் கண்டு வரையறுத்துச் சொல்லியவாறே துளைகருவி துருவிச் சென்ற நிலப்படைகள் அமைந்திருந்தன. துவக்கத்தில் துருவுகருவி 100 அடி வரையிற் றுளைத்துச்சென்றநிலம் அடைமண்படையா யிருந்தது; அதன்பின் 35 அடிவரையில் எண்ணெய் கலந்த சுக்கான்கற்படை யாதலால் அது நிலக்கரியைப் போல் நன்றாய் எரியத்தக்கதா யிருந்தது; அதன்பின் 100 அடிகாறும் ஒருவகையான சலவைக் கற்படை (Joliet marble); அதன்பின் 125 அடிவரையும் மணலுஞ் சக்கிமுக்கிக்கல்லும் ஒருங்குதிரண்டு இருப்புத்தீக்கல்லுஞ் சிறிது செம்புங் கலந்த படை; அதன்பின் 156 அடிகாறும் மண்ணெண்ணெய் ஊறிய பாறைக்களிப்பு, இது தகரமும் ஈயப் பொடியுங் கலந்த பசை போல் தடிப்பாய்க் கொழுவிய வண்டலாய் மேற்கிளம்பியது; அதன்பின் 530 அடி ஆழத்திற் கந்தகக்கலப்புள்ள சுக்கான்

கற்படை; அதன்பின் 639 அடி ஆழத்திற் கந்தகங் கலந்த இரும்புஞ் சக்கிமுக்கிக் கல்லும் உடைய ஒரு சுக்கான் கற்படை துளைக்கப் பட்டது; இச் சுக்கான் கற்படை மிகவுங் கெட்டியாய் இருந்தமையால் வேலை மெதுவாகவே நடந்தது; உள்ளடங்கியிருந்த ஆவி இப்போது வெளிக் கிளம்புதற்கு இடங் கிடைத்தமையால் இந் நிலப்படையின்கண் ஒருவகையான கொந்தளிப்பு அடிக்கடி உண்டாயிற்று; அதனால் அங்கிருந்த தண்ணீர் 30 அடியிலிருந்து 60 அடிவரையிற் சடுதியிற் கீழிறங்கி மறுபடியும் மேன்மட்டத்திற்குச் சடுதியில் எழுவதாயிற்று; அப்போது, துருவுகருவியாற் பெயர்ந்த துண்டுகளும் மற்றைப் பொருள்களும் அத்தண்ணீரோடு கலந்து உடன் வரலாயின; மேலும் மேலும் அத்துருவு தொழில் நடந்து கொண்டே போயிற்று; பின்னர் 711 அடி ஆழத்திற்கு வந்தவுடன் கீழுள்ள பாறையின் வளைவு துளையிடப்பட்டது; நாலரை விரற்கடை அடியிற் றுருவப்பட்ட துளைவழியே 58 வரை வெதுவெதுப்புள்ளதொரு செழும்புனல் பளிங்குபோற் றெளிவாய், வைரம்போற் றூய்தாய், நிலையியற் பொருள் இயங்கியற் பொருள் ஏதுங் கலவாததாய்ப், பருகுதற்கும் உடம்புநலம் பேணுதற்கும் இதுவரையிற் கிடைத்த எல்லா வகையான நீரையும்விட மிகச் சிறந்த தொன்றாய், எக்காலத்தும் ஏழைமக்கட் குதவும் நட்புப் பொருளாய்ச் சடுதியில் வெடித்து மேல் வந்தது.''

''நம்பிக்கை யில்லாதவர்கட்கு இஃதோர் அரியபெரிய நிகழ்ச்சியா யிருக்கின்றது; கட்புலனாகாத ஓர் அறிவுக் காட்சியால் வெளிப்படுத்தப்பட்ட இவ்வுண்மை நிகழ்ச்சியை மறுத்துரைக்கத்தக்கது ஏதுமே இல்லை. இயற்பொருள் நூல் தண்ணீர் அகப்படாதென்று கட்டுரைத்துச் சொல்லியது; மனநூலோ அதனுரையைப் பொய்யென மொழிந்து, இந் நிலவுலகமானது தன் னுருவாணிமேற் சுழன்று செல்லுங்காறும் ஏராளமாய்ப் பெருகியோடும் நீரோட்டம் உள்ளதாகிய ஓரிடத்தை யான் சுட்டிக் காட்டுவேன் என்றது. 1864 ஆம் ஆண்டிலிருந்து சிக்காகோ நகரத்து இந் நீரூற்றானது நாளொன்றுக்குப் பதினைந்து நூறாயிர நாழி தண்ணீர் அளித்து வருகின்றது.'' என்று கலை

நூற் புலமையில் மிக்க சாமுவேல் ஏடன் என்னும் பேராசிரியர் வரைந்திருக்கின்றார்*.

இம்மெய்ந் நிகழ்ச்சியினாற் போதரும் உண்மையாது? பல கலைநூற் புலமையின் மிக்காராலும் அறியப்படாத மறைபொருள்கள், கல்வியறிவே சிறிதுமில்லாத பேதையர் சிலரின் அகக் கண் காட்சியால் நேரே கண்டு தினைத்தனையும் பிழைபடாமல் வெளிப்படுத்தப் படுகின்றன வென்பதன்றோ? 'ஆபிரகாம் ஜேம்ஸ்' என்னும் அக் கல்லா ஆண் மகன், இந்நிலத்தின் மேற்பரப்புக்கு 711 அடி ஆழத்தின் கீழ் உள்ளதான அத் தீஞ்சுவைத் தண்ணீர் நிலையை எங்ஙனங் கண்டறிந்தான்? கல்வித்துறையில் ஆழ்ந்துபோன துரைமக்களின் காட்சிக்கும் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் எட்டாத இந்நிலத்தின் ஆழத்தையும், அவ்வாழத்திலுள்ள பெரியதொரு நீர் நிலையையுங் கண்டது அவனது புறக்கண்ணா அல்லது அகக் கண்ணா? புறக்கண்ணோ மேலுங் கீழும் முன்னும் பின்னும் மறைபட்டிருக்கும் பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் ஒரு சிறிதுங் காணவல்லதா யில்லை; அங்ஙன மிருக்க, அந் நாலிடங்களிலும் அண்மையிலுஞ் சேய்மையிலும் முற்றும் மறைபட்டிருக்கும் பொருள் நிகழ்ச்சிகளைப் பிழையாமற் காணவல்லது ஒன்று உளதாயின், அது நம்மக்களிற் சிலர்க்கு வாய்ந்துள்ள அகக் கண்ணேயாகவேண்டுமென்பது தெற்றெனப் புலனாகின்ற தன்றோ?

அற்றேலஃதாக, கல்வித்துறையிற் சிறந்தாராய்த் திகழும் அறிஞர்க்கும் புலனாகாத மறைபொருள் நிகழ்ச்சிகள், கல்வியறிவில்லாப் பேதையர் சிலர்க்கு நன்குவிளங்குதல் என்னை யெனின்; இப்பிறவியிற் கல்லாதவராய்க் காணப்படும் அகக் கண்ணுடையார் சிலர் மேற்சென்ற பிறவிகளிற் பலதுறைகளிலும் நன்கு கற்றுத், தம் அகக் கண்ணை மறைத்த அறியாமையிருள் விலகி அகவறிவு நன்கு விளங்கப் பெறுகின்றாராகலின், அவர் இப்பிறவியிற் கல்வியறிவின் றுணையில்லாமலே எல்லாவற்றையும் நன்கு நேரே கண்டறியவல்ல அகக்காட்சி யுடையராகின்றாரென்க.

மேலேகாட்டிய மெய்ந்நிகழ்ச்சியில் 'ஆபிரகாம் ஜேம்ஸ்' என்னுந் தெளிவுக் காட்சியினன் கண்ட நிலத்தின் கீழ் நீர் நிலை

* "Phrenological Annual," 1892. Extract from article by Dr. Samuel Eadon, M.D., M.A., L.L.D., & Ph. D.

யினை, அவன் காலத்திருந்தார் எவருமே அறியாராகலின், பிறரொருவர் அதனைக் கண்டறிந்து நினைந்த நினைவே அவனுளத்திற் றோன்றிய தென்று கூறுதலும் ஆகாமை உணர்ந்து கொள்க.

இனிக், கல்வித்துறையிற் றேர்ச்சிபெற்றார் சிலர்க்கும் மறைபொருள் நிகழ்ச்சிகளைக்காணும் அகக்கண்காட்சி யுளதென்பதனை விளக்குவாம். மறைபொருள்களைக்காணும் அக்காட்சிக்கு, அவர்கள் இப்பிறவியிற் பயின்றநூல்களால் உளதாயஅறிவு நேரே துணைசெய்யாவிடினும், இப்பிறவியின் நூலறிவும் மேற்பிறவிகளின் நூலறிவும் ஒருங்குசேர்ந்து, அவரது அகக்கண்ணை மறைத்த வல்லிருளை அகற்றி அதனை நன்குவிளங்கச்செய்தலின், அவை அக்காட்சிக்கு நேரல்காரணமாதல் கருத்திற்பதிக்கற் பாற்று. இற்றைக்கு 163. ஆண்டுகளுக்குமுன் மேனாட்டிற் சுவீடன் தேயத்தில் ஸ்டாக்கோம் என்னும் நகரில் 84-ஆண்டுகள் உயிர்வாழ்ந்தவரான 'சுவீடன்பார்க்கு' (Swedenborg) என்னும் ஆசிரியர் கலைநூற்புலமையிற் றலைசிறந்து விளங்கினவர் ஆவர். இவர் தமக்கு அகவை 55-நடக்கையில், இவரது அகக்கண்திறக்கப்பெற்று, மேலுலகக்காட்சிகளையுங், கடவுளின் இயல்புகளையும், பலதிறப்பட்ட உயிர்கள் உலகங்களின் காட்சிகளையுங்கண்டு நூல்கள் பல எழுதினார். அவர் எழுதிய அந்நூல்கள் ஒன்றில், தாம் மேலுலகக்காட்சிகளையுங் கடவுளியல்புகளையுங் கண்டு, அவைதம்மை நேரே காணமாட்டாத இந்நிலவுலகினர்க்கு அறிவிக்கும்படியாகவே கடவுள் தமக்கு அகக்கண் திறப்பித்தருளினார் என்று நுவன்றிருக்கின்றார். அவரது காலத்திருந்த 'காண்டு' (Kant) முதலான மெய்ந்நூலாசிரியரும் பிறரும், அவரது அகக்காட்சியின் மெய்ம்மையை வியந்துபேசிப் பாராட்டியிருக்கின்றனர். அத்தகைய அப்பெரியார் பலரறியக்கண்டு சொல்லிய இரண்டுமறைபொருள்நிகழ்ச்சிகளை ஈண்டெடுத்துக்காட்டுதும்:-

“ஸ்டாக்கோம் நகரத்தில் உலாந்தா அரசன் தூதுவராய் அமர்ந்திருந்த துரைமகனாரின் மனைவியான 'ஆர்த்திவில்லி' இறந்துபோன தம் கணவர் உணவுபடைக்கும் வெள்ளிக்கலங்களைத் தன்னிடங் கடனாக வாங்கினமையின், அவற்றிற்குரிய பணத்தைச் செலுத்தும்படி ஒருபொற் கொல்லனால் அடிக்கடி வேண்டப்பட்டார். ஆனால், அப்பணம் அவனுக்குத் தங் கணவராற் செலுத்தப் பட்டதெனவே அவ்வம்மையார் நம்பினார்; என்றாலும், அதற்குப் பெற்ற பற்றுச்சீட்டை அவர் கண்டெடுக்கல் முடியவில்லை; ஆகவே, அச்சீட்டு எங்கே யுளதென்று தங் கணவரைக் கேட்டு அறிவிக்கும்படி அவ்வம்மையார் சுவீடன்பார்க்கு ஆசிரியரைக் கெஞ்சி வேண்டிக் கொண்டார். மூன்று நாட் கழித்து அவ்வாசிரியர் அவ்வம்மையாரது இல்லத்திற்குப் போந்து, அங்கே காணவந்திருந்தார் பலர் முன்னிலையில், தாம் அவர்தங் கணவனாரைக் கண்டு பேசியதையும், அவர் அக் கடனைச் செலுத்திப்பெற்ற பற்றுச்சீட்டு அவரது அவ்வில்லத்தின் மேன் மாளிகையின் கண்ணதான ஓர் அறையி லுள்ள நிலைப் பேழையில் வைக்கப்பட்டிருத்தலைத் தாம் அவர் வாய்க் கேட்டறிந்ததையும் எடுத்துரைத்தார். ஆனால், ஆர்த்திவில்லி என்னும் அவ்வம்மையார் தாம் அந்நிலைப் பேழையை முன்னமே தேடிப் பார்த்தும், அஃதங்கில்லாமையை அறிவித்தார். அதற்குச் சுவீடன்பார்க்கு சொல்லியதாவது: அவ்வம்மையாரின் கணவரது ஆவியுருவந் தமக்கு அறிவித்ததில், அந்நிலைப் பேழையின் இடதுபக்கமாயுள்ள, ஓர் இழுவையை இழுத்தால் அதில் ஒரு பலகை காணப்படும்; அப்பலகையை இழுத்தால் அதில் ஒரு கள்ள அறை காணப்படும்; அக் கள்ளவறைக்குள் மறைபொருளாகத் தாம் உலாந்தா அரசற் கெழுதிய கடிதங்களும் அப்பற்றுச் சீட்டும் இருக்கும் எனப் போந்த செய்தி குறிப்பிடத் தக்கதாகுமென்பதே. அச் செய்திகேட்டு அங்கிருந்தா ரெல்லாரும் உடனே மேன் மாளிகைக்குச் சென்று, அவர் விளக்கிச் சொல்லியபடியே இதற்குமுன் எவரும் அறியாத அக்கள்ள வறையில் அப்பற்றுச் சீட்டும் அரசியற் கடிதங்களும் இருக்கக் கண்டார்கள்.”*

இந் நிகழ்ச்சியிற் சொல்லப்பட்ட பற்றுச்சீட்டை மறைத்து வைத்து இறந்துபோன துரைமகனாரன்றி வேறெவரும் அதனை அறியாதிருந்தும், அத்துரைமகனாரின் ஆவியுருவினைத்தமது அகக்கண்ணினாற் றெளிவாய்க் கண்டும், மறைபட்ட அச்சீட்டு இருந்த இடத்தை அவ்வாவியினாற் றெரிந்துரைத்தும், ஒருவரன்றிப் பலர் முன்னிலையில் அதனை மெய்ப்பித்த ஆசிரியர் சுவீடன் பார்க்கின்

* Prof. W. F. Barrett's Psychical Research, pp. 154, 155.

தெளிவுக்காட்சி எவரானும் ஐயுறுதற்கு இடந்தராத வியப்பினதாதல் கருத்திற் பதிக்கற்பாற்று.

இன்னும், இவ்வாசிரியர் 1759-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் ஒரு சனிக்கிழமை பிற்பகல் நாலு மணிக்கு இங்கிலாந்திலிருந்து 'காட்டன்பர்க்கு' என்னும் நகர்க்கு வந்து, அங்கே ஒரு நண்பரால் அவர்தம் வீட்டிற்கு அழைக்கப் பட்டார். இரண்டு மணிநேரத்திற்குப் பின் அவர் அவ்வீட்டை விட்டு வெளியே போய்ப், பிறகு உள்ளே திரும்பிவந்து, அப்போதங்கிருந்த விருந்தினர்குழுவை நோக்கி "இப்போதுதான் 'ஸ்டாக்கோம்' நகரத்தில் ஒரு பொல்லாத தீப் பற்றி எரிகின்றது! அத் தீயானது விரைந்து பரவுகின்றது!" என்று சொல்லிக் கொண்டே அடிக்கடி வீட்டை விட்டு வெளியேபோன வண்ணமாய்த் துடிதுடித்தார். அந்த ஸ்டாக்கோம் நகரமானது காட்டன்பர்க்கு நகரத்திற்கு ஐம்பது செர்மன்மைல் தொலைவிலுள்ளது. மேலும், அங்கே தம் நண்பர் ஒருவரின் வீடு இப்போதே சாம்பலாய்ப் போய்விட்டதெனவுந், தமது இல்லமுங் கூட இடர்ப்பாடான நிலைமையி லிருக்கின்றதெனவும் மொழிந்தார். ஆனால், மாலை எட்டு மணிக்கு மறுபடியும் அவர் வீட்டைவிட்டு வெளியே போய்த் திரும்பி வந்து, தமது வீட்டிற்கு மூன்றாவதான இல்லத்திலேயே அத்தீ அவிக்கப் பட்டுவிட்டது என்று பெருமகிழ்ச்சியுடன் கூறினார். அவர் கூறிய அச்செய்தியானது அந்நகர மெங்கும் பெரியதொரு குழப்பத்தினை உண்டாக்கியது; அன்று அம் மாலைக் காலத்திலேயே அச்செய்தி அரசியற் றலைவர்க்கு அறிவிக்கப்பட்டது. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலையிலேயே அத்தலைவர் சுவீடன்பர்க் காசிரியரைத் தம் பால் வருவித்து அத்தீ நிகழ்ச்சியைப்பற்றி வினவினார். அதற்கு அவர் அந் நெருப்புண்டான வகையையும், அஃதெவ்வளவு நேரம் பற்றி எரிந்தது பின் அஃதெவ்வாறு அணைக்கப்பட்டது என்பவைகளையு மெல்லாஞ் சீராய் எடுத்துரைத்தார். அங்ஙனம் அந்நெருப்புப்பற்றி எரிந்த நேரத்தில், வாணிகக் கழகத்தினரால் விடுக்கப்பட்ட ஓர் ஒற்றன் திங்கட்கிழமை மாலையிற் காட்டன்பர்க்கு நகரத்திற்கு வந்து சேர்ந்தான். அவன் கொணர்ந்த கடிதங்களிற், சுவீடன்பர்க்கு மொழிந்த வண்ணமே அந்நெருப்புப் பற்றிய வரலாறு குறிக்கப்

பட்டிருந்தது. அதற்கடுத்தநாட் காலையில் வந்த அரசியற் றூதுவனும் முன்வந்த செய்தியின் உண்மையை அரசியற் றலைவர்க்கு உறுதிப்படுத்தி விளம்பினன். சுவீடன்பர்க் காசிரியர் மொழிந்தவாறே அந்நெருப்பு அன்று மாலை எட்டு மணிக்குத்தான் அவிக்கப்பட்டது என்க.

இங்ஙனந், தாமிருந்த இடத்திற்கு நெடுந்தொலைவி லுள்ள தமதூரில் நெருப்புப் பற்றி எரிந்ததனையும், பின்னரது அணைக்கப்பட்டதனையும் புறக்கண்ணெதிரே கண்டாற்போல், அத்துணை விளக்கமாகத் தமது அகக்கண்ணாற் கண்டு அரசியற் றலைவர் உட்பட எல்லார்க்கும் எடுத்துக் கூறிய சுவீடன்பர்க் காசிரியரின் அகக்கண்காட்சியி னுண்மையினை எவரேனும் மறுத்துச் சொல்லுதல் இயலுமோ? இயலாதன்றே.

இனித், தெளிவுக்காட்சியுடையார் சிலரால் நோயாளிகட்கு உண்டாகும் நன்மை சிறிதன்று. ஏனென்றாற், சில கொடிய நோய்களின் றன்மை அந்நோய்களாற் பற்றப்பட்டு வருந்துவார்க்குந் தெரிவதில்லை; அவர்க்கு நோய் தீர்க்கவரும் வல்ல மருத்துவர்க்குந் தெரிவதில்லை. சிறந்த மருத்துவர்களும் நோயின் றன்மையும் அதன் மூலமும் நன்குணரப் பெறாமற் பிழைபடுதலால், அவர் கொடுக்கும் மருந்து நோயாளிக்கு நோயினால் விளையுந் துன்பத்தைவிட மிகக்கொடிய துன்பத்தையும் உடலழிவையும் விளைத்துவிடுகின்றன. ஏனென்றால், உடம்பின் மேலே காணப்படும் நோய்களை மருத்துவர்கள் நேரே காண்பதனாற் பெரும்பாலும் பிழைபடாமல் அவை தீர்க்கு முறைகளைச் செய்து அவை தம்மைத் தீர்த்துவிடுகின்றார்கள். ஆனால், உடம்பினுள்ளே நிகழும் நோய்க் காரணங்களையோ அங்ஙனம் அவர்கள் நேரே காண்டல் இயலாமையால், வெறும் உய்த்துணர்ச்சி ஒன்றே கொண்டு ஆராய்ந்து தாங் கருதிய மருந்துகளை ஊட்டுகின்றார்கள்; அல்லது உடலுறுப்புகளை அறுத்துப் பார்த்து அவையிற்றை நீக்க முயல்கின்றார்கள்; இம்முயற்சியிலே பலகாலும் பிழைபட்டுவிடுதலால், நோயாளிகள் அவர்தரும் மருந்தாலும் அவர் செய்யும் முறையாலும் பெருந்துன்புழந்து இறந்துபோகின்றார்கள்! இவ்வாறு நேரும் இடர்கள் சிலவற்றை யாமே பார்த்திருக்கின்றேம். ஒருகால் ஒரு செல்வர் வீட்டு இளமாதரார் ஒருவர்க்கு மிகக்

கொடியதொரு வயிற்றுவலி யுண்டாயிற்று. அதற்காக ஆங்கில மருத்துவர் சிலர்பாற் பெரும்பொருள் கொடுத்து மருந்துகள் வாங்கித் தொடர்பாக உட்கொண்டும், ஏதும் பயன்விளைந்திலது. அதனால், சிறிது காலத்திற்குப் பின் அம்மாதரார் சென்னைக்கு வந்து, அங்கு அறுத்துத் தீர்க்கும் வல்லமருத்துவர் ஒருவர்க்குத் தாம் படும்பாட்டை எடுத்துரைப்ப, அவர் வயிற்றினுள்ளே ஏதோ ஒரு பிசகு நேர்ந்திருக்கின்றது; வயிற்றை அறுத்துப் பார்த்துத் தான் அந்தப் பிசகை நீக்கவேண்டுமென்றனர். அதற்கு அம்மாதரும் அவர் தம் சுற்றத்தாரும் இசையவே, அம்மருத்துவர் அவ்வம்மையார்க்கு மயக்க மருந்து கொடுத்து அவரது வயிற்றை அறுத்துப் பார்க்க அதனுள்ளே ஏதொரு பிசகும் இல்லாமை கண்டு ஏமாற்றம் அடைந்தனர். உடனே அவரது வயிற்றை மறுபடியும் மூடித்தைத்து, அவ்வம்மையார்க்கு மயக்கந் தெளிவித்தார். அவ்வம்மையார் பின்னும் வயிற்று வலியால் துன்புற்றே வந்தனர். இங்ஙனமே மருத்துவர் செய்யும் பிழைபாடுகள் இன்னும் பலவற்றைப் பார்த்துங் கேட்டு மிருக்கின்றேம். ஆகையால், வெறும் உய்த்துணர்ச்சி ஒன்றுகொண்டே உடம்பின் அகத்தே நேரும் பழுதுகளைத் திருத்தமாய் உணர்தல் செல்லாதென்பது உணர்ந்து கொள்ளல்வேண்டும்.

இங்ஙனமாக எத்துணைச் சிறந்த மருத்துவர்களும் உடம்பின் அகத்துள்ள நோயின் கூறுபாடுகளைச் செவ்வனே யறியப் பெருமற் பிழைபடுதலாலும், அதனால் எத்தனையோ சிறந்த மக்கள் பெரிதுந் துன்புற்று உயிரிழத்தலாலும் அயல் நாடுகளிலுள்ள மருத்துவ அறிஞர் சிலர், தெளிவுக்காட்சியுடையார் சிலரைத் துணைகொண்டு நோயாளிகளின் உடம்பினுட் பகுதிகளின் நிலையினைத் தெளிவாகத் தெரிந்து, அவர்க்குள்ள நோய்களை எளிதிற் றீர்த்து வருகின்றார்கள். இதற்கு உண்மையாக நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியினை ஈண்டு எடுத்துக் காட்டுதும்:—

“உவில்டு எனப்பெயரிய ஒரு சிறந்த மருத்துவ ஆசிரியர் நல்ல காலமாய்த், தெளிவுக்காட்சி இயற்கையே வாய்ந்த ஒரு மாதராரது பழக்கத்தைப் பெற்றனர்; இம்மாதரார் நல்லதொரு குடும்பத்தில் அமைதியாய் வாழ்ந்துவரும் நல்லொழுக்கம் வாய்ந்தவர். ஒருநாள் இம்மருத்துவர் அவ்வம்மையாரை நோக்கித்,

தமக்கு நண்பராயுள்ளார் ஒருவர் பல ஆண்டுகளாக ஒவ்வொரு நாளின் இரவிலுந் தம்முடைய முதுகிலும் நெஞ்சிலுஞ் சொலற்கரிய நோய்கொண்டு நெடுநேரம் வருந்துகின்றாரென்றும், இப்போது சிலநாட்களாக ஒரு நாற்காலியில் அவர் இரவு முழுதும் உட்கார்ந்திருக்க வேண்டியவராய் விட்டமையால் அவருடைய கால்கள் வீங்கத்துவங்கியிருக்கின்றன வென்றும் புகன்றார். இந்த நண்பர் மூன்றாண்டுகளாக இலண்டன் மாநகரிற் புகழ்பெற்ற மருத்துவர் பலரால் முறையாகப் பார்க்கப்பட்டு வந்தவர். அவரிற் சிலர் அந்நோயாளியின் நெஞ்சப்பையில் ஏதோ கருகலான ஒரு நோய் இருக்கவேண்டுமெனக் கூறினர்; மற்றுஞ்சிலர் அஃதொரு நரம்பைப் பற்றிய வலியாய் இருக்கவேண்டும் என்றனர்; ஒருவர் அதனைப் பொருத்துப் பிடிப்பு என்றனர்; கடைசியாக உசாவப்பட்ட ஒருவர் அது முதுகெலும்பு அழுகிப்போனமையால் உண்டாயதெனப் பகர்ந்தனர்.

“பிறகு அம்மருத்துவ ஆசிரியர் குறிப்பிட்ட ஒருநாளில் அவர்தம் நோயாளி நண்பர் அவ்வம்மையாரை வந்து கண்டனர். அவ்வம்மையார் சிறிதுநேரம் அவரைச் சும்மா உற்று நோக்கினர். அதன்பின் அந்நோயாளி அவ்வறையைவிட்டுச் சென்றபின், அந்நங்கையார் அவர்க்குள்ள நோயின் நிலைமையைப்பற்றிப் பின்வருமாறு மொழிந்தனர்:—‘அந்நோய் எத்தன்மையதென்பதைக் கண்டேன்; அவரது உடம்பு ஊடுருவிக் காணத்தக்க துலக்கமுடையதாய்த் தோன்றினமையால் யான் அந்நோயின் றன்மையைத் தெளிவாய்க்கண்டேன். அவரது நெஞ்சப்பைக்குப் பின்னே ஒருகட்டி கிளம்பியிருக்கின்றது; அஃதொரு கடுக்கொட்டையின் அளவுள்ளதாய்க் காணப்படுகின்றது; அஃது அழுக்கு நிறம் உடையதாயுமிருக்கின்றது; அஃது அசைவதைப்பார்த்தால் அது வெடித்துவிடும்போற் றோன்றுகின்றது. முற்றும் ஓய்ந்திருப்பதைத்தவிர, வேறேதும் அவர்க்கு நன்மைசெய்யாது’ என்பது.

“உவில்ட் என்னும் அம்மருத்துவ ஆசிரியர், அம்மாதரார் சொல்லியதன் கருத்து இன்னதென அறிந்து, தம்நோயாளி நண்பர்க்கு மருத்துவஞ்செய்யும் அறிஞர்க்குப் பின்வருமாறு ஒருகடிதம் எழுதினார்:—‘நம்நண்பர்க்குள்ள நோயின் இயல்பு இன்னதெனக் கண்டுகொண்டேன். அவரது நெஞ்சப்பையி

னின்று கீழிறங்குஞ் செந்நீர்க்குழாயின்மேற் கடுக்கொட்டையினளவுள்ள ஒருகட்டி கிளம்பியிருக்கக் காண்கின்றோம்; விலாவெலும்புகளினிடையேயுள்ள நரம்புகளை இக்கட்டி நெருக்குவதனாலேயே அவரது முதுகிலும், மார்பின் புறத்தும் அத்துணைக் கொடியநோயும் வலியும் உண்டாயிருக்கின்றன. நாளை நீங்கள் காணும் மருத்துவ ஆசிரியர்க்கும் இந்நோயின் நிலையை எடுத்துரைத்து, அவர் யாது சொல்கின்றாரென்பதை எனக்குத் தெரிவியுங்கள்.' என்பது.

‘‘பிறகு, அந்நோயாளியானவர் மற்றைய மருத்துவர்களோடுஞ் சூழ்ந்து பார்த்ததில், தெளிவுக்காட்சியுடைய அம்மாதரார் தமது அகக்கண்ணாற்கண்டு சொல்லிய அந்நோயின்றன்மையே உண்மையென்று உறுதிப்படலாயிற்று. இன்னும், அந்நோய் தீர்க்கத்தக்கமுறை அந்நோயாளி முற்றும் ஓய்ந்திருத்தலேயாகுமென்பதூஉம் அம்மையார் சொல்லியவாறே அம்மருத்துவரெல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. அம்மாதரார் அந்நோயினியல்பைக் கண்டுரைத்தமையினாலேயே அந்நோயாளி அந்நோய்தீர்ந்து உயிர்பிழைத்தார். அவ்வம்மையாரைக் காண்பதற்குமுன் அவர் வேட்டமாடவுங், குதிரை ஊரவும், வண்டியோட்டவும், மேசைப்பந்தாடவும் மருத்துவர்களாற் கற்பிக்கப்பட்டிருந்தனர்!’’* ஆனால், அங்ஙனஞ்செய்திருந்தால் அவர் உயிரிழந்திருப்பர்! தெளிவுக்காட்சிவாய்ந்த அம்மாதரார் கூறிய அறிவுரைக்கேட்டு அவர் முழுதும் ஓய்ந்திருந்தமையினாலேயே, மறைந்த இடத்திலுண்டான அக்கொடியநோய்நீங்கி நலம் பெற்றார்.

பார்மின்கள்! ஆராய்ச்சி வல்ல மருத்துவர் பலரறிவுக்கும் எட்டாத அப்பொல்லாத உள்நோயின்றன்மை, மருத்துவப்பயிற்சியேயில்லாத அம்மாதராரது அகக்கண்ணுக்கு எவ்வளவு நன்றாகப்புலனாகியது! அதுமட்டுமோ! அவர்கூறிய எளிய முறையைப் பின்பற்றி யொழுகியதனால் அதுமுற்றுமே தீர்ந்தும் ஒழிந்ததன்றோ? ஆகவே, இத்தமிழ்நாட்டவர்களும் இயற்கையிலேயே தெளிவுக்காட்சி வாய்ந்தவர்களாயிருப்பவர்களை ஆங்காங்குத்

* How To Thought-Read, by Prof. James Coates, Ph. D., pp. 39, 40.

தெரிந்தெடுத்துவைத்து, அவரதுஉதவியினால்தமக்குள்ளநோயின்றன்மைகளை உள்ளவாறுணர்ந்து, அவர்கூறும் முறைப்படியே வழுவாதுநடந்து, தமக்குள்ள நோய்கள் நீங்கி நலம்பெறுவார்களாக! இந்நாட்டில் தெளிவுக்காட்சியில்லாதார் பலர் அஃதுடையார்போற் கள்ளமாய் நடந்து மக்களைப் பலவகையால் ஏமாற்றி, அவரது பொருளையுங் கொள்ளைகொண்டு அவரையும் உயிர்மாளச்செய்கின்றனர். ஆதலால், ஆராய்ச்சிவல்ல அறிஞரின் உதவியால், தெளிவுக்காட்சி யுண்மையாக வாய்ந்தார் இன்னாரெனத் தீர்மானமாய்த்தெரிந்து, அதன்பின் அவருதவியை நாடுதலே செயற்பாலதென்பதனை ஒவ்வொருவருங் கருத்திற்பதித்தல் வேண்டும்.

இனித், தெளிவுக்காட்சியின் ஆற்றல் மிகுதியாயுள்ளவர்களுக்கு இப்பிறவியின் நிகழ்ச்சிகள் மட்டுமேயன்றிக், கடந்துபோன பிறவிகளின் நிகழ்ச்சிகளும், இனிவரும் பிறவிகளின் நிகழ்ச்சிகளுந் தெளிவாக விளங்கிவிடுகின்றன. செர்மன்தேயத்து ஆசிரியரான ‘சோக்கி’ (Zschokke) என்பவர் தாமே எழுதிவைத்த தமது வாழ்க்கைவரலாற்றில் தமக்குள்ள தெளிவுக்காட்சியின் ஆற்றலை வியந்து, கூறுவது வருமாறு:—

‘‘எனக்கு முழுதுமே அறிமுகமில்லாத ஒருவரை யான் எதிர்ப்பட்டு, அவர் உரையாடுவனவற்றை யான் உற்றுக்கேட்குங்கால், அக்காட்சி எனக்கு இடையிடையே தோன்றினமையால், அவரது முன்னைப் பிறவியிலிருந்து அவர் இப்போதிருக்கும் நேரம்வரையில் நிகழ்ந்த அவருடைய வாழ்க்கை வரலாறுகள் பல நுட்பமாகவுங் குறிப்பிடத்தக்க ஒன்றிரண்டு முதன்மையான செய்திகள் சிறப்பாகவும் என்முன்னே கனவெனக் குறுக்கிட்டுக் காணப்படலாயின; ஆனாலும், அவை யான் வேண்டாமலே என்வயமின்றித் தெளிவாய்த் தோன்றிச் சிறிதுநேரத்தில் மறைந்துபோயின.

‘‘ஒருகால் ஒரு தையற்காரியின் இளம்பருவத்து வரலாற்றினை, அவள் எங்கள் அறையைவிட்டுப்போன அப்பொழுதே என் குடும்பத்தார்க்கு எடுத்துச்சொன்னேன். யான் அதற்குமுன் அவளைப் பார்த்ததேயில்லை. அவ்வாறிருந்தும், யான் சொல்லியவை முழுதும் உண்மையாயிருந்தமையால், யான் அம்மா

தின் இளம்பருவ வரலாற்றை முன்னமே தெரிந்திருக்கத் தான் வேண்டுமெனக்கூறி, அதனைக்கேட்ட என் குடும்பத்தினர் நகையாடினர்.

"இன்னும் ஒருகால் யான் கானகப்பணியாள (forester) ராம் இளைஞர் இருவருடன் உவால்டுஷட்டு (Waldshut) என்னும் நகர்க்குஏகினேன். மாலைக்காலமாயினமையால்வழிநடந்த வருத்தந்தீர ஒரு விடுதிக்குச்சென்று, அங்குக் குழுமிய பலருடன்உணவருந்தாநிற்கையில், அவர்கள் அறிதுயிலைப்பற்றியும், உறுப்புக்குறியைப்பற்றியும் பகடிபண்ணினர். அவர்க்கு அறிவுதெருட்டும்பொருட்டு, அக்குழுவில் ஓர் இளைஞரை நோக்கிச் 'சிறிது காலத்திற்குமுன் நடந்த உமது வாழ்க்கைவரலாற்றை யான் எடுத்துரைத்தால் நீர் அதனை ஒப்புக்கொண்டு சொல்வீரா?' என யான் வினவ, அவர் 'உண்மையாயின் ஒப்புக்கொண்டுரைப்பேன்' என்றனர். அதன்மேல் அவ்விளைய வணிகருடைய பள்ளிக்கூடநடக்கைகளையும், புல்லிய குற்றங்களையும், அவர் தம் தலைவனது இருப்புப்பெட்டியிற் செய்த திருட்டையும்,அவ்விருப்புப்பெட்டி வைக்கப்பட்டிருந்த அறையின் அடையாளங்களையு மெல்லாம் நன்கெடுத்துக்கூறினேன். அவையெல்லாம் முழுதும் உண்மையாயிருக்கக்கண்ட அவ்விளைஞர் மிகவும் வியப்புற்றவராகி, யான் எதிர்பார்த்ததற்குமேல் உண்மையை ஒப்புக்கொண்டு சொல்லினர்."* என்பது.

இப்பெற்றித்தான தெளிவுக்காட்சியின் ஆற்றல் இன்னும் மிகுதியாய் வளரப்பெற்றார்க்கு முற்பிறவி, இப்பிறவிகளின் நிகழ்ச்சிகளேயன்றி இனிவரும் பிறவிகளின் நிகழ்ச்சியும் இனிது விளங்காநிற்கும். ஆகவே, இத்தெளிவுக்காட்சியினைத் தவப்பயிற்சியினால் விளங்கச்செய்துகொண்டு, நம்மனோர் தொலைவிலுணர்தலாகிய நிகரற்ற விழுமிய அறிவைப் பெறுவார்களாக! ஓம்.

தொலைவிலுணர்தல் முற்றும்.

---

* Clairvoyance, by C. W. Leadbeater, pp. 127-130.

தேடித் தெரிந்து நம்முடனே வைத்துக் கொள்ளக் கடவோம்" என எண்ணுதலாலன்றோ, அவர் தமது வாழ்க்கையைச் செவ்வனே நடைபெறுவித்தற்காம் அறிவும், அதனொடு பெருமுயற்சியும் உடையராய் ஒழுகுகின்றனர்? இத்தகைய ஒழுகலாற்றால் அவர் தமக்குந் தம்மைச் சார்ந்தார்க்கும் பயன்படுதலொடு தம்மவரல்லாத ஏனைப் பொதுமக்கட்கும் பயன்பட்டுவருகின்றனர். இவ்வாறு தம்மைநிலையாகவெண்ணி வாழ்தலாலன்றோ மக்கள் வாழ்க்கையானது பல்லாயிர ஆண்டுகளாகத் தொடர்ந்து நிகழாநிற்கின்றது? இனி, இவ்வாறன்றி, மக்கள் ஒவ்வொருவருந் தமது வாழ்க்கை நிலையின்றி மாயுமியல்பினையே எண்ணியெண்ணி நெஞ்சம் நோவராயின். ஒரு சில ஆண்டுகளில் மக்கள் வாழ்க்கையே இம்மாநிலத்தின்கண் இல்லையாய் ஒழியுமன்றோ? ஆகையால், நிலையாமையை எண்ணிப்பார்ப்பதும் அதனை எண்ணிப் பார்க்கும்படி கற்பிப்பதும் நலந் தருமோவெனிற் கூறுதும்.

நிலையாமையை எப்போது நாம் எண்ணிப்பார்த்தல் வேண்டும், எப்போது நாம் அதனை எண்ணிப்பார்த்தலாகாது என்று ஒவ்வொருவரும் பகுத்துணர்ந்து ஒழுகல்வேண்டும். நிலையாமையை எப்போதுமே எண்ணிப்பாராதவர்கள், செங்குத்தான உயர்ந்ததொரு மலையுச்சியின் ஓரத்தில் நிற்குங் கண்ணில்லாக் குருடனொருவனையே ஒப்பராதலால்.அவர் தமது வாழ்க்கையின் இடையிடையேவரும் அல்லல்களுக்கு ஈடுகட்டமாட்டாதவர்களாய் அறிவும் அன்பும் அறமும் இன்பமும் இன்றிப், புகழும் புண்ணியமுங் கடவுள் நேயமும் இன்றிச் சடுதியில் மாண்டுபோவர்; அங்ஙனஞ் சடுதியின் மாளாமல் நீண்டநா ளிருப்பினும் அவரது இருப்புப் பயனற்ற மூண்மரத்தின் இருப்புக்கே ஒப்பாகும். ஆசிரியர் திருவள்ளுவ நாயனார்,

"அன்பகத்தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று"

என்றருளிச் செய்தது உண்மையன்றோ? இனி, நிலையாமையினையே எந்நேரமும் எண்ணிப் பார்ப்பவர்கள், செங்குத்தான அவ்வுயர்ந்த மலைமுகட்டின்மேலிருந்து கீழுள்ள பெரும்பள்ளத்தாக்கை நோக்கி உள்ளந் திகில் கொண்டு அதனைவிட்டு அப்புறம் அகலாமல் அதன் கீழ்த் தன்வயமின்றியே விழுந்தொழியப் போகுங் கண்ணுடையா னொருவனையே ஒப்பாராதலால் அவரும் அறிவும் அன்பும் இல்லாமல், அறமும் புண்ணியமுஞ் செய்யாமற், புகழுங் கடவுள் நேயமும் வாயாமற் சடுதியிலே மாய்ந்துபோவர்; அன்றி அங்ஙனம் மாயாது நெடுநாள் இருப்பினும், அவரது இருப்பு,

"ஏவவுஞ் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒமளவும் ஓர் நோய்"

என்று தெய்வத் திருக்குறள் கூறுமாறு இம்மா நிலத்துள தாம் ஒரு நோயினிருப்புக்கே ஒப்பாகும்.

ஆகவே, நிலையாமையை எண்ணிப் பாராதிருத்தலும் ஆகாது, எந்நேரமும் எண்ணிப் பார்த்திருத்தலும் ஆகாது. அற்றேல், அதனை எண்ணிப் பார்க்க வேண்டுவதெப்போதெனின்; அறிவுங் கல்வியுஞ் செல்வமும் வாய்த்தவர்கள் தாம் பெற்ற அவ்வரிய பேறுகளைப் பயன்படுத்துதலிற் சிறிதுங் காலந்தாழாமைப் பொருட்டு, வாழ்க்கை நிலையாமையினை இடையிடையே தமது நினைவுக்குக் கொணர்தல் வேண்டும்.

ஒருவன் மிகச்சிறந்த அறிவுங் கல்வியுஞ் செல்வமும் பெற்றது எதற்காக? தன்னிலும் அறிவிற் குறைந்தார்க்குங், கல்லார்க்கும், பொருளின்றி வறுமைப்பட்டார்க்கும் அவற்றைக்கொண்டு உதவிசெய்தற்காகவன்றோ? ஒருவன் தான்பெற்ற அறிவைப் பிறர்க்குப் பயன்படுத்தாக்கால் அது அவன்றனக்கும் பயன்படாமலே

போகின்றது. பிறர்க்குப் பயன்படுத்துகின்ற காலங்களில் மேன்மேல் விளக்கமுடையதாகிப் பல நுண்ணிய அரும்பொருள்களை அறிந்து பெருகும் அறிவு, அங்ஙனம் பயன்படுத்தப்படாத காலங்களில் தன்னுடைய விளக்கமும் வலிவும் இழந்து போகின்றது. அங்ஙனமே ஒருவன் தான்கற்ற கல்வியும் பிறர்க்குப் பயன்படுத்துந்தோறும் ஆழ்ந்துவிரிந்த பெரும்பரப் புடையதாகும். இனிச், செல்வமுந் தீயவல்லாவழிகளில் அளவறிந்து செலவு செய்யப்படுமாயின், அது முதலிற் குறைவது போற்றோன்றினும், பின்னர் ஒன்று, பத்து, நூறு, ஆயிரமாய்ப் பெருகாநிற்கும்; எங்ஙனமென்றாற், பலர்க்குப் பயன்படும் நல்வழிகளில் அளவறிந்து அறிவாய்ப் பொருட்செலவு செய்கின்றவனையும், பிறர்துயர் பொறாமல் உளம் இரங்கி அற்றார்க்கும் அலந்தார்க்கும் அறஞ் செய்கின்றவனையுங், கல்விக்குங் கற்றார்க்கும் ஏராளமாகப் பொருளுதவிபுரிந்து கலையொளி எங்கும் பரவுமாறு செய்கின்றவனையும் நச்சி வந்து எல்லாரும் அவன் வேண்டுமாறெல்லாம் இசைந்து நடப்பராதலால், அவன் முதலிற் செய்யுஞ் செலவு பின்னர் அவற்குப் பெரும்பொருட்டிரளை நல்குவது திண்ணமேயாம். ஆகவே, அறிவுங் கல்வியுஞ் செல்வமும் பிறர்க்குப் பயன்படுதலால் மட்டுமே தம்மையுடையானுக்கும் பெரிது பயன்பட்டு என்றும் அழியாது நிலையாய் விளங்கும்; அவை பிறர்க்குப் பயன்படுதல் இல்லாக்கால் தம்மையுடையானுக்கும் பயன்படுதல் இலவாய் நிலையின்றி அழியும். எத்தனையோ பெரிய அறிவாளிகளுங் கல்வியில் மிக்காருஞ் செல்வத்திற் சிறந்தாரும் பண்டைக் காலந் துவங்கி இன்றுகாறுங் கணக்கின்றி வந்தபடியாய்த்தான் இருக்கின்றனர். ஆனால், அவருள் தம் அறிவையுங் கல்வியையுஞ் செல்வத்தையும் பிறர்க்குப் பயன்படுமாறு செய்து வாழ்ந்தவர்களின் பெயரும் புகழுமே ஆங்காங்

குக் குன்றின்மேலிட்ட விளக்குப்போல் எங்கும் மங்காமற் றுலங்குகின்றன. மற்றுப் பயன்படாமல் அவற்றைத் தம்மொடு தாம் வைத்து மாய்ந்த எண்ணிறந்தாரையோ வெறும் பெயரளவாய்க்கூட எவருமேயறியார். ஆகவே, பிறர்க்குப் பயன்படாத அறிவு கல்வி செல்வங்கள் நிலையில்லனவாய் மாய்ந்துபோதலையும், அவற்றையுடையவரும் அவைதம்மாற் றாமும் நலம்பெறாமல் நீர்மேற் குமிழிபோல் நிலையின்றி மறைந்துபோதலையும் இடையிடையே நினைந்துபார்த்துப் பயன்பட ஒழுகுதற்கும் அறஞ்செய்தற்கும் முன்னிற்றல்வேண்டும். இவ்வாறு நிலையாமையினை எண்ணிப்பார்ப்பது அறஞ்செய்தற்பொருட்டாகவேயல்லாமல் வேறு எதற்கும் அன்றென்பது நன்கு தெளியப்படும். இது குறித்தன்றே **நாலடியாரிற்**,

"புன்னுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை—இன்னினியே
நின்றான் இருந்தான் கிடந்தான்றன் கேள்அலறச்
சென்றான் எனப்படுத லான்" என்னும் அறவுரையும்

எழுந்தது!

இனி, அறிவுங் கல்வியுஞ் செல்வமும் பெறுதலினும், பெற்ற அவைதம்மைப் பிறர்க்குப் பயன்படுத்துதலினும் முனைந்து நிற்பவர்கள், நிலையாமையினைச் சிறிதுமே எண்ணிப்பார்த்தலாகாது. "நாளைக்கு நாம் இறந்தொழிந்தால் நாம் பெறுதற்கு முயலும் அறிவுகல்விசெல்வங்கள் என்னும்! நமது முயற்சிதான் என்னும்! நம்மாற் பயன்பெறுவார்தாம் நிலையாக இருப்பவரோ! அவர்பெறும் பயனும் நிலைப்பதோ! எல்லாம் நிலை இல! எல்லாம் பயனில! எல்லாம் மின்னலொளி! எல்லாங்கடலலை! எல்லாம் வெளிமினுக்கு! எல்லாம் வீண்முயற்சி! எல்லாம் வெறும் புரட்டு!" என்று அடுத்தடுத்து நினைப்பார்க்கு உள்ளக்கிளர்ச்சி குன்றிவிடும்; தாளாண்மை மாய்ந்து

விடும்; உலகமும் உயிரும் பிறவுமெல்லாம் வெறும் பாழாய்த்தோன்றும்; அவர் அறிவுங் கல்வியுஞ் செல்வமும்பெறார்; பிறர்துயர் கண்டும் அவர் மனமிரங்கார்; பிறர்க்கோருதவியும் புரியார் அவர். ஆதலால், அறிவுங் கல்வியுஞ் செல்வமும் பெற்றுப் பிறர்க்குப் பயன்பட்டு, அதனாற் றாமும் மேன்மேலுயர்ந்து பேரின்பப்பெருக்கிற் படிதற்கான நோக்கத்துடன் மக்களெல்லாரும் இறைவனால் இப்பிறவியில் வருவிக்கப்பட்டிருப்பதனை நன்காழ்ந்துபார்த்து, அவ்வருட்பெரு நோக்கத்திற்கிசைந்து நடத்தலில் அனைவருங் கருத்தூன்றற்பாலரே யன்றி, எந்நேரமும் நிலையாமையினை நினைந்து மடிந்து வறிதே மண்ணாகற்பாலரல்லரென்க. இவ்வரும்பெருண்மை,

"பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை யின்மை பழி" என்னுந் **திருக்குறளானும்**,

"நல்லகுலமென்றுந் தீய குலமென்றுஞ்
சொல்லள வல்லாற் பொருளில்லை—தொல்சிறப்பின்
ஒண்பொருள் ஒன்றோ தவங் கல்வி ஆள்வினை
என்றிவற்றான் ஆகுங் குலம்" என்னும் **நாலடியாரானும்** நன்கெடுத்துக் காட்டப்பட்டமை காண்க.

திருவள்ளுவர்

செந்தமிழ் மொழிக்கொரு நந்தாமணிவிளக்காய்த் தோன்றித், தன்கட் சுடர்ந்தொளிரும் அறிவுப்பேரொளியைத், தான்பிறந்த தமிழ்நாட்டவர்க்கு மட்டுமேயன்றி, இந்நிலவுலகின் பிறபகுதிகளிலுள்ள பிறநாட்டு மாந்தர்க்கும் வேற்றுமையின்றி வீசி, எல்லாரையும் ஒரேமுழுமுதற் கடவுளாம் ஒப்பற்றதந்தைக்கு உரிமை மகாராய் வைத்து, அவரறியவேண்டும் அரும்பொருள் முற்றும் ஒருங்கே அறிவுறுத்துந் தெய்வத் திருக்குறள் என்னும் நூலை அருளிச்செய்த பெரியாரையும் அவரது வரலாற்

றையும் அறிய விரும்பாதார் யார்? எவருமிராரன்றே? ஆதலால், அவரைப் பற்றிய குறிப்புகள் சிலவற்றை இங்கு வரைவாம்.

திருவள்ளுவ நாயனார், கிறித்துசமய முதல்வரான ஏசுமுனிவர் பிறப்பதற்கு முப்பதாண்டுகள் முன்னமே பிறந்தருளினாரென்பதை **மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்** என்னும் எமது பெருநூலின்கண் பலசான்றுகள் கொண்டு விளக்கிக்காட்டியிருக்கின்றோம். அதன் விரிவை அங்கே கண்டுகொள்க.

இவர்தந் தந்தையார் பெயர் '**பகவன்**' எனப்படுமென்றும், இப்பகவன் தமிழ்நாட்டுத் தாபதவொழுக்கத்தினரான ஓர் அந்தணரானவரென்றும், இவர்தம் அன்னையார் கருவூரிற் புலையர் குலத்திற் பிறந்து '**ஆதி**' எனப்பெயர் பெற்றவரென்றுங் **கபிலரகவல்** கூறுகின்றது. இனி, **ஞானாமிர்தம்** என்னும் வீட்டுநூல் திருவள்ளுவரின் தந்தையார் பெயர் 'யாளிதத்த முனிவர்' எனக் கூறுமேனும், இவர்தம் அன்னையார் ஒரு புலைச்சியென்றே மேலைவரலாற்றோடு ஒருப்பட்டுரைக்கின்றது. யாளிதத்தமுனிவரென்பது இயற்பெயராகவும், பகவன் என்பது சிறப்புப்பெயராகவுந் திருவள்ளுவரின் தந்தையார் ஒருவர்க்கே வழங்கிவந்தமை இவ்விருநூல்களாலும் அறியப்படும். தமிழ்நாட்டிலுள்ளவர்கள் தம்மின் மூத்தாரையுங் கல்வியறிவின் மிக்காரையும் பெருஞ்சிறப்புகள் உடையாரையும் அவர்க்குரிய இயற்பெயரான் வழங்குவது குற்றமாமெனக்கருதி, அவர்பிறந்த ஊர்ப்பெயரானாதல் அன்றி வேறு சிறப்புப்பெயர்களானாதல் அவரைக் குறித்து உரையாடுதல் தொன்றுதொட்ட வழக்கமாய்ப் போதருகின்றது. ஆதலாற், திருவள்ளுவரின் தந்தையார்க்கு இரண்டு நூல்களில் இருவேறு பெயர்கள் ஓதப்பட்டதில் ஏதும் மாறுபாடில்லையென்க. திருவள்ளுவர் தந்தையாரின் பெயரளவிற் சிறிது மாறுபாடு காணப்படி

னும், அவர் தவவொழுக்கத்திற் சிறந்த முனிவரென்பதும், அவர்தம் அன்னையார் ஒருபுலைச்சியே யென்பதுங் கபிலரகவற்கும் ஞானாமிர்தத்திற்கும் ஒத்தமுடிபாயிருத்தலை கருத்திற் பதிக்கற்பாலதாகும். அம்முனிவர்பிரான் விழுமிய அந்தணர்மணியாயிருந்தும், பிறப்பளவில் இழிந்தாளாகக் கருதப்படும் ஒரு புலைச்சியை விழைந்து அவளை அவர் மணந்துகொண்ட பான்மையினை நினைத்துப் பார்க்குங்கால், அத்துணைச்சிறந்த பெரியாருள்ளத்தைக் கவரத்தக்க மனநலமுங் கற்பொழுக்கமும் வனப்பும் அவ்வம்மையார் உடையராயிருந்தாராதல் வேண்டுமென்பது இனிது விளங்காநிற்கும். தாமீன்ற குழவிகளை ஈன்றஇடங்களில் உள்ளார்க்கே தந்து பற்றின்றிச் சென்ற பகவனாரின் கருத்துக்கு, மாறின்றியொழுகி, அவருடன் நிழல்போற்சென்ற ஆதியம்மையாரின் பற்றற்ற உள்ளமுங் காதற்கற்பொழுக்கமும் மிகவும் பாராட்டற்பாலனவாகும்.

இனித், தம் தந்தையார் பெயர் 'பகவன்' என்றிருத்தலையுந், தம் தாயார் பெயர் 'ஆதி' என்றிருத்தலையுங் கருதித், தம்மைப்பெற்ற அவ்விருவர்செய்த நன்றியையும் அன்பினால் அகங்குழைந்துருகி நினைந்தமையாற்றான், ஆசிரியர் திருவள்ளுவர் தாம் இயற்றியருளிய திருக்குறள் என்னும் ஒப்புயர்வில்லாத் தனிச்செந்தமிழ் நூலின் முகத்தே கடவுள் வழிபாடு செய்கின்றுழி அம் முழுமுதற்கடவுள் பெயராக **ஆதிபகவன்** என்னும் அவ்விரு வடசொற்றொடர்ந்த தொடரை முதற்செய்யுளிலேயே அமைத்தருளினார். 'திருக்குறள்' நூன்முழுதுந் தனிச்செந்தமிழ்ச் சொற்களினாலேயே யாத்திட்ட அப்பேராசிரியர், அந்நூன்முகத்திற் கடவுளைக் குறித்தற்கு எத்தனையோ பல தனித்தமிழ்ச்சொற்க ளிருப்பவும் அவற்றையெல்லாம் விடுத்து, 'ஆதிபகவன்' என்னும் வடசொற்றொடரைத் தெரிந்தமைத்ததற்குக் கழிபெருங்

காரணம் ஒன்றிருத்தல் வேண்டுமன்றோ? அக்காரணந் தான் யாதோவெனிற், றம் தாய்தந்தையர் தமக்குச் செய்த நன்றியை அதனால் நினைவுகூர்தற்கு அவர் விழைந்தமையே உறுபெருங் காரணமாமென்க. இங்ஙனமே, நூலியற்றும் பேராசிரியர், தம் தாய் தந்தையர் உடன்பிறந்தார் சுற்றத்தாரைப் பற்றிய குறிப்புகளையுந், தமது வாழ்க்கைக் குறிப்புகளையுந் தாமியற்றும் நூல்களிலே ஆங்காங்குக் குறிப்பாலும் வெளிப்படையாலும் நுவன்றுசெல்லுதல் இயல்பு. சைவசமயாசிரியர்களான திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வருந் தாம் அருளிச் செய்த தேவார திருவாசகங்களில் தமது வரலாற்றுக் குறிப்புகளைப் பெரும்பாலும் வெளிப்படையாகவுஞ் சிறுபான்மை உய்த்துணரவைப்பாகவும் அமைத்துரைத்தல் காண்க. ஏனை நூலாசிரியர் அவர்போற் றம்முடைய குற்றங் குறைகளை இறைவனிடத்தே முறையிட்டுச் சொல்லிப் பாடுதலிலராய், அறம் பொருள் இன்பங்களையும், ஒரு கதை தழுவிவருந் தொடர்நிலைச் செய்யுட்களையும் இயற்றினோர்களாகலின் அவைதம்மிற் றம்முடைய வாழ்க்கைக் குறிப்புகளை வெளிப்படையாய்ச் சொல்ல இடம்பெறாது, அவைதம்மிற் சிலவற்றை ஆங்காங்குக் குறிப்பாகவே நுவலலாயினர். நூலாசிரியர்க்குரிய இவ்வழக்காறு, தமிழ்நூலாசிரியர் பாலேயன்றி, ஆங்கிலம் ஆரியம் முதலான ஏனை மொழிநூலாசிரியர் பாலுங் காணப்படுதலும், அவருடைய நூல்களை ஆராய்ந்து நுட்பங்கள் வரையும் உரைவல்லார்கள் அதனைத் தெரிந்தெடுத் தெழுதலும் அவ்வந் நூல்வல்லார்வாய்க் கேட்டுணரப்படும். ஆகவே, இங்குத் தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனார், தமது தெய்வச் செந்தமிழ் மொழிமேல் வைத்தபற்றினையுஞ், செந்தமிழாக்கங் கண்ணுங் கருத்துமாய்ப் பேணுந் தமது காலத்து நல்லிசைப்

புலவர் மேற்கொண்ட தனிச் செந்தமிழ்வழக்கினையும் பேணி, "ஆதிபகவன்" என்னும் வடசொற்றொடரால் முழுமுதற்கடவுளுக்குத் தமது நூலின்முதலிலேயே பெயர் கூறுவாரானது, அத்தொடரின் முன்னின்ற 'ஆதி' என்பது தம் அன்னையார்க்கும், பின்னின்ற 'பகவன்' என்பது தம்தந்தையார்க்கும் பெயராயமைந்து, அவ்விருவரையுந் தமது நினைவிற் கொணர்தல் பற்றியேயாமென்பது திண்ணம். திருவள்ளுவனாரோடு உடன் பிறந்தவரான ஔவையாரும்,

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"

என்று கூறியிருத்தலை உய்த்துணருங்கால் அவருந் தவநலத்திற் சிறந்த தம்தாய்தந்தையரை நினைந்தே அங்ஙனங் கூறினார் என்பது புலனாம்.

இனித், திருவள்ளுவனாரோடு ஒருவயிற்றிற் பிறந்த கபிலர் என்னும் அந்தணர் பெருமான் தமது வரலாற்றினைத் தங்குடியினரான பார்ப்பனர்க்குத் தெரிப்பான் வேண்டி இயற்றிய அகவலில்.

"அருந்தவ மாமுனியாம் பகவற்குக்
கருவூர்ப் பெரும்பதிக்கட் பெரும்புலைச்சி
ஆதி வயிற்றினில் அன்றவதரித்த
கான்முளை யாகிய கபிலனும் யானே,
என்னுடன் பிறந்தவர் எத்தனை பேரெனில்?
ஆண்பால் மூவர் பெண்பால் நால்வர்,
யாம் வளர்திறஞ் சிறிது இயம்புவல் கேண்மின்!
ஊற்றுக் காடெனும் ஊர்தனிற் றங்கியே
வண்ணார் அகத்தினில் உப்பை வளர்ந்தனள்,
காவிரிப்பூம் பட்டினத்திற் கள்விலைஞர் சேரியில்
சான்றார் அகந்தனில் உறுவை வளர்ந்தனள்,
நரப்புக் கருவியோர் நண்ணிடுசேரியிற்
பாணர் அகத்தினில் ஔவை வளர்ந்தனள்;
குறவர் கோமான் கொட்டினைப் புனஞ்சூழ்

வண்மலைச் சாரலில் வள்ளி வளர்ந்தனள்,
தொண்டை மண்டிலத்தில் வண்டமிழ் மயிலையில்
நீளாண்மை கொளும் வேளாண் மரபுயர்
துள்ளுவரிடத்தில் வள்ளுவர் வளர்ந்தனர்,
அரும்பார் சோலைச் சுரும்பார் வஞ்சி
அதியன் இல்லிடை அதியமான் வளர்ந்தனன்,
பாரூர் நீர்நாட் டாரூர் தன்னில்
அந்தணர் வளர்க்க யானும் வளர்ந்தேன்.''

என்று தம் தாய்தந்தையர் ஆதியும் பகவனும் ஆவரெனவுந், தம்முடன் பிறந்தவர் உப்பை உறுவை ஔவை வள்ளி எனப் பெண்பால்நால்வரும், வள்ளுவர் அதியமான் கபிலர்எனத் தம்மைச்சேர்த்து ஆண்பால் மூவரும் ஆவரெனவுங் கூறும் இதனினும் மிக்கதொரு சான்று பிறிதின்மையிற் றிருவள்ளுவரின் பெற்றோர் ஆதியும் பகவனுமே யென்றலிற் சிறிதும் மாறுபாடில்லையென்க.

இனி, இக்கபிலரகவல் எளிய தமிழ்நடையில் இயற்றப்பட்டிருத்தல் கண்டுங், கபிலர்க்குப் பூணூல் இட ஒருப்படாத பார்ப்பனக் குழுவினர்க்கு அறிவு தெருட்டல்வேண்டிச் சிறுபிள்ளையாயிருந்த கபிலர் இதனைச் செய்தாரென வழங்குங்கதை நம்பத்தகாததாயிருத்தல் கொண்டும் இது கபிலராற் செய்யப்பட்டதன்றென்றும், இஃதொரு ''கட்டுநூல்'' என்றுங் கூறினருமுளர். இக்கபிலரகவல் இயற்றப்பட்டதற்குக் காரணங் கூறுங் கதை நம்பத்தகாததுபற்றி இந்நூலையே கட்டுநூலென்றல் ஆராய்ச்சியுணர்வில்லாதார் கூற்றாகும். கல்வி நலம் மனநலம் ஒழுக்கநலம் முதலியவைகளை நோக்காது, இந்நலங்கள் இல்லாரையும் பிறப்பளவில் உயர்த்துதலும், இந்நலங்கள் உடையாரையும் பிறப்பளவில் இழிவுபடுத்துதலுஞ் செய்து போந்த அஞ்ஞான்றைப் பார்ப்பனமாந்தர்க்கு அறிவுகொளுத்தும் பொருட்டாகவே இவ்வரியநூல் கபிலரால் இயற்றப்பட்டதென்பதுமட்டும் மறுக்கப்படா

ததாகும்; இதற்கு அகச்சான்றாகப் போந்த,

''பார்ப்பன மாந்தர்காள் பகர்வது கேண்மின்!
இறந்தவராய் உமை இல்லிடை யிருத்திப்
பாவனைமந்திரம் பலபட உரைத்தே
உமக்கவர் புத்திரர் ஊட்டின போது
அடுபசியாற் குலைந்தாங்கவர் மீண்டு
கையேந்தி நிற்பது கண்டதார் புகலீர்!
அருந்திய உண்டியால் யார் பசி கழிந்தது?
ஒட்டியர் மிலேச்சர் ஊணர் சிங்களர்
இட்டிடைச் சோனகர் யவனர் சீனர்
பற்பல நாட்டினும் பார்ப்பார் இலையால்;
முற்படைப்பதனில் வேறாகிய முறைமைபோல்
நால்வகைச் சாதி இந்நாட்டில் நீர் நாட்டினீர்!
மேல்வகை கீழ்வகை விளங்குவது ஒழுக்கால்;
பெற்றமும் எருமையும் பிறப்பினில் வேறே,
அவ்விருசாதியில் ஆண் பெண் மாறிக்
கலந்து கருப்பெறல் கண்டதுண்டோ?
ஒருவகைச் சாதியாம் மக்கட் பிறப்பினில்
இருவகையாக நீர் இயம்பிய குலத்துள்
ஆண் பெண் மாறி யணைதலும் அணைந்தபின்
கருப்பொறை யுயிர்ப்பதுங் காண்கின்றிலிரோ?
எங்குலத் தெங்கவித் திடப்படுகின்றதோ
அங்குலத் தங்கவித் தங்குதித்திடுமால்,
மாறி வேறாகும் வழக்கம் ஒன்றிலையே;
பூசுரர்ப் புணர்ந்து புலைச்சியர் ஈன்ற
புத்திர ராயினோர் பூசுரர் அல்லரோ?
பெற்றமும் எருமையும்பேதமாய்த்தோன்றல்போல்
மாந்தரிற் பேதமாம் வடிவு எவர் கண்டுளார்?
வாழ்நாள் உறுப்பு மெய் வண்ணமோடு அறிவினில்
வேற்றுமை யாவதும் வெளிப்படலின்றே;
தென்றிசைப் புலையன் வடதிசைக் கேகிற்

மேலும், ஊற்றுக்காட்டில் உப்பை என்னுந் தம் தமக்கையார் பிறந்து ஒரு வண்ணாரகத்தில் வளர்ந்தமையுங், காவிரிப்பூம்பட்டினத்திற் கள்விற்பார் சேரியில் தம் மற்றொருதமக்கையாரான உறுவை பிறந்து ஒரு சான்றார் வீட்டில் வளர்ந்தமையும், அப்பட்டினத்திலேயே யாழ்பயிலும் பாணச்சேரியில் ஓர் யாழ்ப்பாணரில்லில் தம் மற்றொருதமக்கையாரான ஔவையார் வளர்ந்தமையும், வள்ளிமலையில் தினைப்புனஞ்சூழ்ந்த மலைச்சாரலில் தம் மற்றொரு தமக்கையாரான வள்ளி பிறந்து ஒரு குறவர் தலைவன் வீட்டில் வளர்ந்தமையுந், தொண்டைமண்டலத்தின் கண்ணதான திருமயிலாப்பூரில் தந் தமையனாரான திருவள்ளுவர் பிறந்து ஒரு துளுவவேளாளரிடத்தில் வளர்ந்தமையும், வஞ்சிமாநகரிற் றம்மற்றொரு தமையனாரான அதியமான் பிறந்து அதியமான் இல்லில் வளர்ந்தமையுங், கடைமுறையாக எல்லார்க்கும் இளவலாகிய தாந் திருவாரூரிற்பிறந்து ஓர் அந்தணர் இல்லில் வளர்ந்தமையும் நிகழ்ந்தன நிகழ்ந்தாங்கு எடுத்துக்கூறும் இவ்வுண்மைநூலைக் கட்டுநூலென்றார் உரையே பெருங்கட்டாயிருக்கின்றது !

மேலுந், தம்மை யுயர்த்தி மற்றை யெல்லாவகுப்பினரையும், வேசிமக்கள் அல்லது அடிமைகள் எனப் பொருள்படுஞ் "சூத்திரச்" சொல்லால் வழங்கும் பார்ப்பனரின் நூல்களாகிய "மிருதி"களையும் "புராணங்களை"யும் "வேதங்களை"யும் பார்ப்பனர்கள் தாமே எழுதி வைத்துக்கொண்டு, அவைகளைத் தாமெழுதிய நூல்கள் என்றால் அவற்றுள் நடுவிகந்து சொல்லியவைகளைப் பிறர் நம்பாரெனக்கருதி, அவைகளெல்லாம் இறைவன் அருளிச்செய்தவைகள் என்று அவர்கள் கட்டிவிட்டாற்போல, இக்கபிலரகவல்நூலில் உலகவியற்கை மக்களியற்கைக்கு வேறாய் நடுவிகந்து கட்டிச்சொல்லப்பட்டது ஏதேனும் ஓரெட்டுணையாயினும் உண்டா? ஒருசிறிது

மில்லையே. இக்கபிலரகவலிற் சொல்லப்பட்ட அறங்கள் அத்தனையும் எல்லா மதத்தவராலும் எல்லா மக்கட் பிரிவினராலும் உவந்தேற்றுக் கொள்ளப்படும் விழுப்பம் வாய்ந்தனவாயிருத்தல், அதன் மேற்காட்டிய பகுதிகளால் விளங்குவதொடு பிற்காட்டப்படும் பகுதியானும் நன்குவிளங்குதல் காண்க.

"மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ?
காற்றுஞ் சிலரை நீக்கி வீசுமோ?
மாநிலஞ் சுமக்க மாட்டேனென்னுமோ?
கதிரோன் சிலரைக் காயேனென்னுமோ?
வாழ் நான்குசாதிக் குணவு நாட்டினுங்
கீழ் நான்குசாதிக் குணவு காட்டினுமோ?
திருவும் வறுமையுஞ் செய்தவப் பேறுஞ்
சாவதும் வேறிலை தரணி யோர்க்கே.
குலமும் ஒன்றே, குடியும் ஒன்றே,
இறப்பும் ஒன்றே, பிறப்பும் ஒன்றே,
வழிபடு தெய்வமும் ஒன்றே, யாதலால்,
முன்னோர் உரைத்த மொழிதவறாமல்
எந்நாளாயினும் இரப்பவர்க் கிட்டுப்,
புலையுங் கொலையுங் களவுந் தவிர்ந்து,
நிலைபெற அறத்தின் நிற்பதை அறிந்து,
ஆணும் பெண்ணும் அல்லதை உணர்ந்து,
பேணி யுரைப்பது பிழையெனப் படாது."

என்னும் இப்பகுதி எத்துணை மேதக்க அறவுரை பொதிந்ததாய் எந்நாட்டவரானும் எக்கொள்கையினரானும் பொன்னேபோற் போற்றற்பாலதாயிருக்கின்றது! கங-அ-அடிகளையுடைய இக்கபிலரகவலிற் பொதிந்துள்ள அறவுரைகளத்தனையுந், திருக்குறளிற்போந்த அறவுரைகளோடு ஒத்து, அவற்றினுஞ் சுருக்கமுடையனவாய்ப், பயில்வோருள்ளத்திற் பசுமரத்தாணியெனப் பதியுங் கூர்

மெய்யாய்ந்து திகழ்கின்றன. இத்துணைச்சிறந்த அறவுரை களும் ஒருங்கு விழுமியதாய இந்நூலை ஒருவர் பொய்யாகக்கட்டி, அத்தனைக் கபிலர் பெயரால் புனைந்து விட்டாரென்னும் பொய்யுரையினும் மிக்கதொரு புளுகுரையினை யாண்டுங் கண்டிலேம்.

மேலும், ஒருவர் தம்மை யுயர்த்துதற்பொருட்டுப், பொய்யான பகைதைகளைச்கட்டி ஆக்கியதொரு நூலை யின் அதனைக் கட்டு நூலென்றல் வாய்வதேயாம். மற்று, இக்கபிலரகவலின் ஆசிரியராகிய கபிலரோர் தம் அன்னை புலைச்சி யென்றும், அவள் ஒரு முனிவனைக் கூடித் தம் மையுள்ளிட்ட எழுவர் மக்களைப் பயந்தனளென்றும்; அவருள் ஒருவர் வண்ணாரகத்திலும் மற்றொருவர் கள்விற் பார்சேரியிற் சான்றார் வீட்டிலும், மற்றொருவர் பாண ரில்லத்திலும், பின்னுமொருவர் குறவர் குடிசையிலும், ஏனையொருவர் தாளுவவேளாளர்கந்தனிலும், வேறொரு வர் அதியமான் இல்லிலுந், தாம் அந்தணரகத்திலும் வளர்ந் தனரென்றுந் தமது பிறப்பினிழிவையுந், தம்முடன் பிறந் தாரிற் பலர் இழிந்த குலத்தாரிடம் வளர்ந்த இழிவையுந் தினைத்தனையும் ஒளியாமல் நிகழ்ந்தவற்றை நிகழ்ந்தவாறே எடுத்துரைக்கும் பொய்யாநாவிற் சான்றோராகிய கபிலர் பெருமான் ஆக்கிய இவ்வறுசிறுநூலைக் கட்டு நூலென்றார் உரையே பெரியதொரு பொய்க் கட்டாம். இது கட்டு நூலாயின், எழுவரின் இழிந்த பிறப்பும். அவர் பெய ரும், அவர் பிறந்த ஊரும், அவர் வளர்ந்த இடமும், அவரிற் பெரும்பாலார் வளர்ந்த இழிந்த குடியும், எல் லாமக்களுயிர்க்கும் உரித்தாயசுகும் விழுமிய அறவுரை களும் இதன்கட் சொல்லப்படுமோ வென்று நடுநின்று ஆராய்ந்து காணவல்லார்க்கு, இதனைக் கட்டுநூலென்று கரைந்தார் பார்ப்பனரும் அவர் வழிப்பட்டார் சிலருமே யன்றோல், ஏனைப் பொய்யாநாவினர் அங்ஙனஞ் செய்யா ரென்பது தெற்றென விளங்கா நிற்குமென்க.

இனி, இக்கபிலரகவற் செய்யுள் நடைக்கும், புற நானூற்றின்கட் காணப்படுங் கபிலரது செய்யுள் நடைக் கும் வேறுபாடு உளதன்றோ? இக் கபிலரகவற்செய்யுள் நடை எளியதாயிருக்கப், புறநானூற்றின்கட் காணப் படுங் கபிலர்செய்யுட்களின் நடை அரிய தொன்றா யிருக்கின்றதன்றோ? ஆதலால், இருவேறு வகைப் பட்ட அவ்விரண்டையுங் கபிலரே ஆக்கினாரென்றல் யாங்ஙனம்பொருந்துமெனிற்; சாதியிறுமாப்புக்கொண்டு தம்மை இழிபுபடுத்திய பார்ப்பனரை நேர்முகப்படுத்தி அவர்க்கு அறிவு தெருட்டுமொறியற்றிய இவ்வகவலில், அவர்க்கு விளங்காத திரிசொற்களைப் புணர்த்தி இதனை ஆக்கினராயின், இவரது அறிவுரை அவர்க்குப் பயன் படாதுபோம். ஆதலால், அவரெல்லார்க்கும் எளிதிற் பொருள் விளங்கத்தக்க தமிழியற்சொற்களினாலேயே ஆசிரியர் தமதறிவுரையினை இதன்கண் அமைத்துரைக் கலாயினர். ஆயினும், இதன் தமிழ்நடையும் இதன்கட் சொல்லப்பட்ட பொருளும் மேதக்க சிறப்பு வாய்ந்து, புறநானூற்றிற்போந்த இவருடைய செய்யுட்டிறனை ஒத் திருத்தல் தமிழ் வல்வார்க்கெல்லாம் இனிது விளங்கிக் கிடத்தலின், எளியநடையொன்றேபற்றி இஃதவர் இயற் றிய தன்றெனக் கிளத்தல், தமிழ்நடைச்சுவையும் அறப் பொருள்வளமும் அறியாதார் செயலேயாமென்க. ஓரா சிரியரே ஒருகால் எளிய நடையிலும், பிறிதொருகால் அரிய நடையிலும் நூலியற்றுதல்கூடும். அங்ஙனம் இரு வகை நடையில் ஓராசிரியரே காலமும் இடனும் நோக்கி நூல்கள் இயற்று மாற்றினைத் தமிழ்மொழியின் மட்டுமே யன்றி ஆங்கிலம் ஆரியம் முதலிய மொழிகளிலுங் கண்டு கொள்க. என்றிதுகாறுங் கூறியவாற்றால், திருவள்ளு வர்தம் தம்பியாராகிய கபிலர் இயற்றிய 'கபிலரகவல்' என்னும் மெய்ந்நூலால் தேற்றமாகவும், 'ஞானமிர்தம்' என்னும் வீட்டுநூலாற் சுருக்கமாகவும் நுவலப்பட்ட

படி திருவள்ளுவர்தந் தாய்தந்தையர் ஆதியும் பகவனு மேயாவரென்பதூஉம், ஆதியென்னும் அவர்தம் அன்னையார் புலையர் குடியிற்றோன்றி மேதகு பெண்மைக்குணங்கள் நிரம்பப்பெற்றவராய்த் திகழ்ந்தன ரென்பதூஉம், அவர்தந் தந்தையார் தமிழ்நாட்டுத் தாபதவொழுக்கத்திற் றலைநின்ற ஒரு முனிவரே யாவரென்பதூஉம், இவ்விருவருங் கூடிப்பெற்ற அருமை மகார் எழுவரில் முதலிற்பிறந்த நால்வரும் பெண்மக்களாவரென்பதூஉந், தமிழ்நாடுசெய்த தன்னிகரில்லாப் பெருந்தவத்தால் அப்பெண்மக்கள் நால்வர்க்குப் பின் ஐந்தாம் பிள்ளையாகத் தோன்றியவரே **திருவள்ளுவராவரென்பதூஉம்,** இவர் திருமைலாப்பூரிற் பிறந்தருளித் துளுவவேளாளரொருவராற் சிறிதுகாலம் வளர்க்கப்பட்டன ரென்பதூஉம் நன்கு புலனாகாநிற்கும்.

அற்றேல், **நல்கூர் வேள்வியார்** என்னும் பழைய புலவரொருவர் பாடிய,

"உப்பக்கம் நோக்கி உபகேசி தோண் மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
மாதாநு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு"

என்னுஞ் செய்யுளில் வடதிருமதுரைக்குச் சிவபிரான் களைகண் ஆயினாற்போலத் தென்றிருமதுரைக்குத் திருவள்ளுவர் களைகணாயினா ரென்பது சொல்லப்பட்டதே கொண்டு, திருவள்ளுவர் பிறந்த இடம் திருவாலவாயே யாகுமென்றாரும் உளர். ஆனால், திருவள்ளுவர் தாமியற்றிய ஒப்புயர் வில்லாத் திருக்குறள் நூலைத் திருவாலவாய்ச் செந்தமிழ்க் கழகத்தில் அரங்கேற்றிய காலந் தொட்டு அப்பாண்டிமாநகருக்குண்டான தனிப்பெருஞ் சிறப்பை அச்செய்யுள் தெரிக்க வந்ததன்றி, அவர் அங்குப் பிறந்தருளினாரென்று அது கூற வந்திலாமையின், அதற்கவ்வாறு பொருள்கொண்டாருரை சிறிதும்

பொருந்தாது; மேலும், திருவள்ளுவமாலைக்கு உரையெழுதிய ஆசிரியரும் அச்செய்யுளுக் கெழுதிய உரைக்கீழ்க்குறிப்பில் "நாயனாராலே திங்கட் குடையுடைச் சீர்சால் வழுதியுஞ் சங்கப்புலவருந் தலைழத்தினிதோங்கிய மதுரைக் குண்டான சிறப்புச் சொல்லியபடி" என்றெழுதினாரல்லது, அவர் ஆண்டுப் பிறந்தருளின சிறப்புச் சொல்லியபடி என்றெழுதாமையும், அச்செய்யுளிற் றிருவள்ளுவரது பிறப்பைப் பற்றிய குறிப்பு ஏதுங் காணப்படாமையுங் கருத்திற் பதிக்கற் பாலனவாகும்.

இனி, மேலைச் செய்யுளிற் போந்த 'உபகேசி' என்பதற்கு "நப்பின்னைப் பிராட்டி" என்று **நேமிநாத உரைகாரர்** கூறியதே கொண்டு 'உபகேசி தோண் மணந்தான்' என்றது கண்ணபிரானை யென்று உரை கூறினாருமுளர்.* இருக்குவேத காலந்தொட்டு "நீண்ட சடையினையுடையான்" எனப் பொருள்படுங் 'கேசி' எனுஞ் சொல் சிவபெருமானுக்கே உரித்தாக வழங்கப்பட்டுவருதலானுஞ், சிவபிரான் ஓர் உருத்திரனை ஏவிவருவித்த நஞ்சினை அருந்தினானென அவ்விருக்கு வேதப் பத்தாம் மண்டிலங் "கேசி விஷஸ்ய பாத்ரேண யத் ருத்ரேணாபி பத் ஸக"† என நன்கெடுத்துக் கூறுதலானுங், "கேசிநீ" எனுஞ்சொல் உமைப்பிராட்டியார்க்கே பெயராக வடசொல் விளக்க நூல்கள் நுவலுதலானுங்‡, 'கேசி' என்னுஞ்சொல் திருமாலுக்குப் பெயராகவாதல் 'உபகேசி' என்பது கண்ணன் மனைவியருள் ஒருவரான நப்பின்னைக்குப் பெயராகவாதல் பழைய வடநூலேதும் உரைப்பக் காணாமையானும், 'உபகேசி' என்பது சிவபிரானொடுகூட இருப்பவள் எனப் பொருள்பட்டு உமைப் பிராட்டியார் மேற்றாகவே வருதல் தெற்றென

* செந்தமிழ், ௧, ௨. † இருக்குவேதம், ௧௦, ௧௩௬, ௧.
‡ See The Sanscrit English Dictionary of Apte.

விளங்கா நிற்றலின், 'உபகேசி தோண்மணந்தான்' எனுஞ்சொற்றொடர் சிவபிரானையே குறிக்குமென்க. சிவபிரான் உமைப் பிராட்டியாரை மணந்து தான் அருளிச்செய்த "முத்தமிழ் வேதத்தால்" உலகிய லொழுக்கத்தை நிறுத்தி வடதிருவாலவாயில் எழுந்தரு ளினாற் போலத், திருவள்ளுவனாரும் பாப்பம்மையாரை மணந்து தாம் அருளிச்செய்த முப்பாற் செந்தமிழ் மறையாகிய 'திருக்குறளால்' உலகிய லொழுக்கத்தை நிலைபெறுத்தித் தென்றிருவாலவாயில் எழுந்தருளினா ரென அவரையும் அவரருளிச்செய்த நூலையும் இறைவ னோடும் இறைவனருளிச்செய்த நூலோடும் ஒப்பித்தா ராயிற்று. "சதாசிவந்தத்துவம் முத்தமிழ் வேதம்"* என்று திருமூலர் அருளிச் செய்தமையால் இறைவன் முத்தமிழ் வேதம் பகர்ந்தமை அறியப்படுமென்க. எனவே, திருவள்ளுவர் பிறந்தருளிய ஊர் திருமைலாப்பூரே யாகுமல்லது மதுரைமாநகர மாகாமை தெற்றென விளங்கா நிற்கும்.

மேலுந், திருவள்ளுவர் திருமைலையில் ஓர் இருப் பை மரத்தின் கீழ்க் கண்ணதான குடிலொன்றிற் றோன் றினாரென வழங்குந் தொன்றுதொட்ட வழக்கிற் கேற் பவே, இன்றும் அவ்விருப்பைமரமும், அவர் தோன்றிய குடிலின் அடையாளமாக அம்மரத்தின் அருகே அவ ரது திருவுருவம் நிறுத்திய திருக்கோயிலொன்றுந் திரு மைலையிலிருக்கின்றன; அது போலத், திருவாலவாயி லாதல் வேறெந்த வூரிலாதல் அவை யிரண்டும் இருத்தல் அறியப்படாமையிற் றிருமைலையே அவர் பிறந்தருளிய இடமாகுமெனக் கபிலரகவல் நுவலும் வரலாறே உண் மை வரலாறாகுமென்ற கடைப் பிடிக்க.

இனித், திருமைலையில் ஒரு துளுவவேளாளர்பால் விடப்பட்டு அவரால் வளர்க்கப்பட்டு வந்த மகவைக்

* திருமந்திரம், ௮௬.

கண்டு, அவ்வேளாண் டலைவரின் உறவினர் "யாரோ இழிகுலத்தார் காமத்தாற்பெற்றுப் போகட்ட அகதிப் பிள்ளையை இவர் வளர்க்கின்றார்! ஈதென்னை!" என்று பழிகூறாநிற்ப, அதற்கு மிகவருந்திய அச்செல்வர் அம்மக வைப் பிரிதற்காற்றாராய்த், தம் விளைபுலத்தில் உழுதொ ழில் செய்யும் பறைக்குடிகளுக்குக் குருவாய் உள்ள ஒரு வள்ளுவனை அழைத்து, அவன்கையில் அதனை ஈந்து "இதனைப் போற்றி வளர்ப்பாயாக!" எனக்கூறி, அவற்கு அதன்பொருட்டு ஆம் செலவுகட்கும் வேண்டும் பொ ருள் நல்கினார். அதுமுதல் அக்குழவி அவ்வள்ளுவன் பால் வளர்வதாயிற்று. அங்ஙனம் வள்ளுவனாற் போற்றி வளர்க்கப்பட்டமைபற்றியே நம் ஆசிரியர்க்குத் திரு வள்ளுவரெனும் பெயர் வழங்குவதாயிற்று. ஆகவே, ஆசிரியர்க்கு அது சாதிபற்றிவந்த பெயரேயாதல் திண் ணம். இஃது ஆசிரியரோடு ஒரு காலத்தினரான மாமூலனார்,

"அறம்பொரு ளின்பம் வீடென்னும் அந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவன்என்பானோர் பேதை அவன்வாய்ச்சொற்
கொள்ளார் அறிவுடையார்"

என்று தாமருளிய செய்யுளால், ஆன்றபுலமையிற் சிறந்து தெய்வத் தன்மையுடையராய் விளங்கும் பெருமானைச் சாதிபற்றி 'வள்ளுவன்' என இழித்துக் கூறுவோன் எவனேனும் உளனாயின் அவன் அறிவில்லா மடவோ னே யாவனென வலியுறுத்திச் சொல்லிய வாற்றால் நன்கு விளங்கும்.

வள்ளுவர் என்பார் பறையர்க்குக் குருமாராய்க் குறி சொல்லிப் பிழைக்கும் ஒரு வகுப்பினர் ஆவர். இச்சொல் வள் என்னும் முதனிலையிற் பிறந்து 'தோல் வினைஞர்' எனப் பொருள் படுவதாகும். 'வள்பு' என் பது தோலிற் செய்த வாரை யுணர்த்துதல், "மாசற

விசித்த வாருறு வள்பின்" என்னும் புறநானூற்று னும் (௫0), "வள்புதெரிந் தூர்மதி வலவ" என்னும் ஐங்குறுநூற்றுனும் (௪௮௬) அறியப்படும். வாரைக் கொண்டு இறுக்கிக் கட்டப்படும் பறையினை அறைந்து ஊரார்க்குச்செய்தி யறிவிக்குந் தொழிலினையுடையார் வள்ளுவரெனப் பட்டமை,

"திருநாள் படைநாள் கடிநாள் என்றிப்
பெருநாட் கல்லது பிறநாட்கு அறையாச்
செல்வச் சேனை வள்ளுவ முதுமகன்"

எனப் பெருங்கதையுட் போந்த பகுதியானும் (௨, ௩௨—௩௪) நன்குவிளங்கா நிற்கும். இங்ஙனம் பறை யறையுந் தொழிலினையுடையார் பண்டைக் காலத்திற் 'பறையர்' ஆயினதுபற்றி, அவரிற் சிறிது ஏற்றமுடை யார்க்கு 'வள்ளுவர்' எனும் பெயர் வழங்கலாயிற்று; யாங்ஙனமெனிற், பிறர் தமக்கு நேரும் ஊழ்வினைப் பயன்களை நன்களந்துரைக் குந் தொழில், பின் நேர் வதனைப் பறைசாற்றியறிவிக்குந் தொழிலோடு ஒப்பு மை யுடையதாகலின் என்பது. கல்வியறிவு சிறிது மில்லாப் பறையர்க்குட் கோணூற் புலமை நிரம்பிப், பிறர் தம் வினைப்பயன்களை அளந்துரைக்கும் வள்ளுவர், அவரின்வேறாய், அவர்க்குக் குருமாராய் அமைந்து பாராட்டப்படுதல் இயற்கையேயாம்.

இனி, நம்பேராசிரியர் இங்ஙனம் வள்ளுவரெனப் பெயர் பெற்றதன் காரணம் உணராமையினாலோ, அல் லது அவரது சாதியிழிபினை மறைத்து அவர்க்கோர் ஏற் றங்கற்பிக்க விழைந்த கருத்தினாலோ, உலகத்தின்கண் ணுள்ள எல்லாச்சாதியினராலும் எல்லாமதத்தினராலும் ஒருங்கு தழுவப்படுஞ் செந்தமிழ்மாமறையை உலகத் தினர்க்கு வழங்கிய நல்லிசைப்புலவர் மாமணியை உயர் குலத்தவராகக் கூறவேண்டுமென்னுஞ் சாதிப்பற்றினா லோ, ஒருசாரார், ஆசிரியர் அரியபெரிய பொருள்களை

அகத்தடங்கிய 'திருக்குறளை' உலகிற்கு வழங்கியருளின வள்ளன்மைதோன்ற அவர்க்கு வள்ளுவர் எனும் பெயர் வழங்கலாயிற்றென் றுரைகூறினார். அச்சொல் அவர் கூறுமாறு வள்ளன்மைப்பொருள் பயப்பதாயின், அது 'வள்ளல்' என நிற்கவேண்டுமல்லால் 'வள்ளுவர்' என நில்லாது. தொல்லாசிரியர் நூலுரைவழக்கில் யாண்டும் வள்ளுவர் என்னுஞ்சொல் வள்ளன்மைப்பொருள் தரக் காணாமையின், அச்சொல்லுக்கு யாங்கூறியதே உண் மைப்பொருளாதல் திண்ணமென்க.

இனி, மற்றுமொருசாரார் "வள்ளுவன் என்னுஞ் சொல்லிற்குக் கற்றுணர்ந்தவன் என்பது தாதுப்பொ ருள்" என்று பொருளுரைத்தார். 'வள்' என்னும் முத னிலையால்உணர்த்தப்படும் பலபொருள்களுட் 'கற்றுணர் தல்' என்னும் பொருளும் ஒன்றென்பது பழையதமிழ் நூல் எதனாலும் பெறப்படவில்லை. அற்றன்று, 'வள்' என் பது செழுமை என்னும் பொருளில் வருமாகலின், இவ் விடத்திற்கு ஏற்பக் 'கல்விச்செழுமை' என்று பொரு ளுணரத்தலே எமது கருத்தாகுமெனின்; அது பொருந் காது; 'வள்' என்னும் முதனிலையே கல்விச்செழுமை யினை உணர்த்துவதன்று; அது ஈறு இடைநிலை முதலான உறுப்புகளொடுகூடி ஒரு சொற்றொடரில் நின்றவழி, அச்சொற்றொடர்ப் பொருளுக்கு இணங்க ஒரோவொரு கால் அப்பொருள் உணர்த்தாநிற்கும். இன்னும், அஃது அங்ஙனம் பொருளுணர்த்துவதும், 'பம்,' 'அம்' முத லான ஈறுகளொடு புணர்ந்து 'வளப்பம்' 'வளம்' என்றா கிச், 'சொல்வளப்பம்,' 'கல்விவளம்' என வேறு சொற் களோடு இயைந்து நின்றவழியேயாம். மற்று, வள்ளுவர் என்னுஞ் சொல்லின் முதனிலையாகிய 'வள்' என்பதற் கோ வேறுபொருளுளதாதலை முன்னரே காட்டினமாக லானும், அதன் ஈறு சாரியைமுதலியன வேறுபட நிற்ற லானும் அதற்கு அப்பொருளுரைத்தல் சாலாதென்க.

இனித், தமக்கு வளர்ப்புத்தந்தையாய் அமைந்த வள்ளுவத்திருமகன் கல்வியிற்சிறந்தவனாகலின், அவனாலும், அஞ்ஞான்றிருந்த ஏனைத்தமிழாசிரியராலுந் தமிழ் இலக்கண இலக்கியங்களும் பலகலைநூல்களுங் கற்பிக்கப்பட்டு, இயற்கையிலே நுண்மாண் நுழைபுலமுடையராயிருந்த நம் ஆசிரியர் கலைநிரம்பிய முழுமதியெனக் கல்வியறிவும் இயற்கையறிவும் ஒருங்கு நிரம்பித் திகழ்ந்தனர். இவ்வாறு நம் ஆசிரியர் செந்தமிழ்ப்புலமைக்கு ஒருவரம்பாய்ப் பொலிவுறுகின்றகாலத்து இவர்க்குக் கட்டிளமைப்பருவம் நிரம்பிற்று.

அப்போது, காவிரிப்பாக்கம் என்னும் ஊர்க்குத் தலைவராய் ஆயிரம் ஏர்வைத்து உழவுதொழில் நடாத்துவாரான வழித்துணைவர் (மார்க்க சகாயர்) எனப் பெயரிய ஒரு வேளாண்செல்வர் தம்முடைய விளைபுலங்கள் வித்திடப்பட்டுப் பயிர்கிளைக்குங்காலத்து யாரும் அறியாமலே கருகியழிந்து முழுவதூஉம் பாழாய் விடுவது கண்டு மிகவருந்திப், "பல்லாயிர ஏழைமக்கள் பசிப்பிணியால் வருந்த இவையிங்ஙனம் அழிகின்றனவே! என்செய்வேம்! இக்குறையினை நீக்கும் பெரியார் எவரேனும் உளராயின், அவர்க்கு என் அருமைமகளை வாழ்க்கைப்படுத்துவேன்" என்றெண்ணி, "இதுநீக்க வல்லார் யார்?" என்று பலரையும் வினவிவரலானார். பின்னர் நம் ஆசிரியரது பெரும்புகழ் எங்கும் பரவவே, வழித்துணைவர் அவரை யணுகிப் பணிந்து, "அருட்பெருந்தகையே, ஏழைமக்கள் பலர் பிழைத்தற்கு உதவியாயுள்ள அடியேனது விளைபுலம் பயிர் இலை விரியுங் காலத்திற் கருகிப் பாழாய்விடுகின்றன! பலர் அதனால் மிகவறியராகிப் பசிப்பிணியாற் சொல்லுதற்கரிய துயர் உழக்கின்றனர்! அடிகளது அருட்கடைக்கண்நோக்கம் அதன்மேற் படுமாயின், அக்குறைதீர்ந்து அது பலர்க்கும் பயன்படும்" என்று [illegible] பெருங்குறையினைத் தெரி

PLEASE SEND YOUR SUBSCRIPTION RS THREE FOR

THE OCEAN OF WISDOM

A high class English bi-monthly magazine

Edited by the great veteran scholar

SWAMI VEDACHALAM

Master of the Sacred Order of Love, Pallavaram, &

Formerly Lecturer in Tamil in the Madras Christian College

This magazine is unique in kind being the only periodical in English which acquaints the English knowing world with the history, the religion, the philosophy and the literature of the Tamil country, by publishing in it not only original articles on these subjects but also translations of some important Tamil works with exegetical commentaries.

Except Dr. Caldwell's great work "*The Comparative Grammar of the Dravidian Languages*," and Dr. G. U. Pope's excellent translations of some Tamil classics, there is little in English worthy of note that helps to a correct understanding of the products of the Tamilian intellect. It is greatly to be deplored that the Tamils who had been the first civilized nation of the ancient world have no adequate representation in the historical, religious and philosophical literature in English. Neither in the famous *Sacred Books of the East* series of 49 vols. edited by that great oriental scholar Prof. Max Muller, nor in the still later ***Harvard Oriental Series*** of 32 vols. edited by Dr. C. R. Lanman of Harvard University, is there included any old Tamil work either literary or religious. So deplorable an absence of even eminent Tamil works in English is due as much to the growing and unexampled selfishness of the rich Tamils and their extreme ignorance of their own literature, as to the poverty and illiteracy of the ordinary people and to the unlimited aversion shown by the priestly classes to Tamil.

Please therefore let a little of your hard-earned money be given for espousing the cause of Tamil a great and the only ancient language still alive and making a correct representation of its history and literature to the world in English, since they are being grossly misrepresented by oriental scholars and since there is not a single organ in English to plead for Tamil & Tamilian thought. Please also induce your friends to subscribe to this and oblige by sending their addresses to the editor so that he may send this by V. P. P. and receive their subscription.